# இரண்டாம் மொழி
# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 7

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

# இரண்டாம் மொழி
# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 7

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

இரண்டாம் மொழி - தமிழ்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 7

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN ............................

முதலாம் பதிப்பு : 2016
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

பதிப்பு:
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 1, 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு மற்றும் பாடநூல்கள் என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரியவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும் :**
கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை:** **கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
**திரு.எஸ். வை. ஸ்ரீதர்**
சிரேஷ்ட விரிவுரையாளர், சப்பிரகமுவ பல்கலைக்கழகம்.
**திரு. தம்மிக்க ஜயசிங்க**
விரிவுரையாளர், றுகுணு பல்கலைக்கழகம்.
**வ. விஜயலெட்சுமி**
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம் :** **திரு. மு. தயாநிதி**
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
**திருமதி நா. சீதரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு :** **வ. விஜயலெட்சுமி**
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
**எஸ். எம். ஏ. சிபாயா**
பிரதிப் பணிப்பாளர், தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
இசுறுபாய.
**திரு. சி. காண்டீபன்**
அபிவிருத்தி உதவியாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுறுபாய.
**திருமதி ஏ. ஐ. ரதி**
ஆசிரிய ஆலோசகர், க / கலைமகள் ம.வி. கண்டி
**ஜனாப். எம்.எஸ்.எம். றபீக்**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், நிக்கவரட்டிய.
**திருமதி. பவானி சபாநாதன்**
ஆசிரியர், அத்துலத்முதலி கல்லூரி, கல்கிசை.
**திருமதி. தமிழின்பம் மாணிக்கராஜா**
ஆசிரியர், கொ / விவேகானந்தா கல்லூரி, கொழும்பு - 13.
**திரு. பொ. அசோக்குமார்**
ஆசிரியர், வ / டலோஸ் த.ம.வி., உடப்புசல்லாவ, நுவரெலியா.

**அட்டைப் படம் :** **திரு. ரி. டி. ஏ. கிரிஷாந்த குமார,**
உதவி அதிபர், வ/ வவு/ போகஸ்வேவ ம. வி., வவுனியா.

**பதிப்பு :** **வ. விஜயலெட்சுமி**
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**கணினிப் பதிப்பு :** **திருமதி எம். என். எவ்ப். றிஹானா**
தேசிய கல்வி நிறுவகம்.
**திருமதி டபிள்யு. ஏ.சி. செவ்வந்தி**
தேசிய கல்வி நிறுவகம்.

**காரியாலய உதவி :** **செல்வி. என். என். ரி. லியனஹே**
**திரு. ஐ.பி. நவரத்ன**

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தொகுதிப் பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6 - 11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10 - 11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6 - 11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின்படி பிரதானமாகக் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்னும் நான்கு தேர்ச்சிகளின் கீழ் தரம் 7 க்கான இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

‘இரண்டாம் மொழி - தமிழ்’ பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இவ் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள **சொற்களஞ்சியம்** என்னும் பகுதி ஆசிரியர் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்ள உதவியாக அமையும். இவ்வாறு செயற்பாடு சார்ந்த கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் மாணவர் பாடங்களைப் பயில்வதற்கு வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**நூல் ஆக்கக் குழு**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 04. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vi |
| 05. | தேசிய இலக்குகள் | viii |
| 06. | அடிப்படைத் தேர்ச்சிகள் | ix - x |
| 07. | பாடத்திட்டம் | xi |
| 08. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | |
| | 1.0 கேட்டல் | 01 - 18 |
| | 2.0 பேச்சு | 19 - 34 |
| | 3.0 வாசிப்பு | 35 - 49 |
| | 4.0 எழுத்து | 50 - 57 |

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்ப வற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல் |

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

| | |
|---|---|
| சமூகச் சூழல்: | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும். |

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும் நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

# பாடத்திட்டம்

## 5. பாடத்திட்டம்

### செவிமடுத்தல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார். | 1.1 பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • சுய விபரத்தைக் கூறல்<br>• நண்பனைப் பற்றிக் கூறல் | • இலகுவான உரையாடல்களை அவதானமாகக் கேட்டுக் கிரகித்து, அதற்கேற்பத் துலங்குவார். | 03<br>03 |
| | 1.2 அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • மழைப் பாடல்<br>• மழை நாளில் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்கள் | • இலகுவான அறிவுறுத்தல்களை அவதானமாகக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 04 |
| | 1.3 வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • கடைக்குச் செல்லும் வழியை விசாரித்தல் | • மிக இலகுவான வழிநடத்தல்களைச் செவிமடுத்து, முக்கிய விடயங்களை இனங்கண்டு துலங்குவார். | 03 |
| | 1.4 அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருத்தல் தொடர்பான அறிவித்தல் | • மிக இலகுவான பேச்சுக் களைச் செவிமடுப்பார்.<br>• செவிமடுத்த அறிவித்தலுக்கு ஏற்பத் துலங்குவார். | 03 |
| | 1.5 வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புகளையும் பாடல்களையும் செவிமடுத்து இரசிப்பார். | • இலகுவான பாடல் " ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை....." | • இலகுவான ஒலிபரப்பு - களையும் பாடல்களையும் கிரகிப்பார்.<br>• பாடலைச் செவிமடுத்து இரசிப்பார். | 04 |

## பேச்சு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 பொதுவான விடயங்கள் தொடர்பான, வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார். | 2.1 அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார். | • வீட்டிற்கு அயலில் நடக்கும் எளிமையான அறிவுறுத்தல்கள்<br>- விளையாடும் சந்தர்ப்பம் | • இலகுவான அறிவுறுத்தல்களை விளங்கித் துலங்குவார். | 03 |
| | 2.2 வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாடுவார். | • இலகுவான உரையாடல் பிரதேச செயலகத்திற்குச் செல்ல வழிகேட்கும் சந்தர்ப்பம் | • இலகுவான வழிநடத்தல்களைச் செவிமடுத்து உரையாடுவார். | 03 |
| | 2.3 நட்புரீதியாக உரையாடுவார். | • இலகுவான உரையாடல்<br>- நண்பர்களின் உரையாடல்களில் வேறு நண்பர் பங்கேற்று அறிமுகமாகும் சந்தர்ப்பம் | • இலகுவான வினாக்களை வினாவி உரையாடுவார். | 03 |
| | 2.4 தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார். | • விழா ஒன்றுக்குச் செல்வதற்கு ஆயத்தமாதல்<br>- புதுமனை புகுவிழா | • மற்றவர்களுடன் உரையாடி, தகவல்களையும் கருத்துகளையும் பரிமாறிக் கொள்வார்.<br>• ஏனையோரின் பண்பாடுகளுக்கு மதிப்பளிப்பார். | 03 |
| | 2.5 கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபடுவதற்காக உரையாடுவார். | • விழா ஒன்றிற்காக உணவுப் பண்டங்களை வாங்குதல்<br>- பாடசாலை விளையாட்டுப் போட்டி | • இலகுவான கொடுக்கல் வாங்கல்களின்போது, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப உரையாடுவார். | 03 |
| | 2.6 சிறிய வாக்கியங் - களைப் பயன்படுத்தி, உரையாடுவார். | • படக் கதை: புத்தியுள்ள காகம்<br>• படங்களைப் பார்த்து அபிநயத்துடன் பேசுதல் | • இலகுவான சொற்களைப் பயன்படுத்திப் பேசுவார். | 03<br>03 |

## வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 நாளாந்தத் தேவைகளுக்காக, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார். | 3.1 கடிதங்களையும் வேறு படிவங்களையும் விளங்கி வாசிப்பார். | • உறவுமுறைக் கடிதம் | • கடிதங்களிலுள்ள முக்கிய தகவல்களை விளங்கி வாசிப்பார். | 02 |
| | 3.2 இலக்கியங்களை விளங்கி வாசிப்பார். | • சிறுவர் பாடல்: "குருவிக் குஞ்சே"<br>• சிறுவர் கதை: "தெனாலி ராமனின் புத்திக் கூர்மை" | • பரிச்சயமான தலைப்புகளில் எழுதப்பட்ட இலக்கியங்களை விளங்கி வாசிப்பார். | 03<br>03 |
| | 3.3 அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார். | • வைத்தியசாலையில் காணப்படும் அறிவுறுத்தல்கள் | • இலகுவான அறிவுறுத்தல்-களை விளங்கி வாசிப்பார். | 02 |
| | 3.4 கட்புல சாதனங்களில் உள்ள தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார். | • படங்களுடன் கூடிய கதை: "தாய் சொல்லைத் தட்டக்கூடாது" | • படத்திலுள்ள விடயங்களை கருத்துள்ள வகையில் தொடர்புபடுத்தி வாசிப்பார்.<br>• வாசித்த கதையைக் கூறுவார். | 03 |

## எழுத்து

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 நாளாந்தத் தேவைகளுக்காக, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய, முக்கியமான விடயங்களைக் கிரகித்து, அவற்றைச் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுவார். | 4.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார். | • எழுத்துக்கள் பற்றிய விளக்கம் | • ஒலி வடிவங்களுக்குப் பொருத்தமான வரி வடிவங்களை எழுதுவார்.<br>• எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.<br>• எழுத்துக்களைப் பொருத்த - முறக் கையாண்டு சொற்கள், சொற்றொடர்களை எழுதுவார். | 03 |
| | 4.2 விபரங்களை உள்ளடக்கிய பந்திகளை எழுதுவார். | • சுயசரிதை: ஒரு பேனாவின் சுயசரிதை | • தரப்பட்ட தலைப்புக்களின் கீழ், விபரங்களை ஒழுங்குபட எழுதுவார். | 03 |
| | 4.3 ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார். | • காலைக் கடமைகள் | • தனது நாளாந்தக் கடமைகளை ஒழுங்குபட எழுதுவார். | 02 |
| | 4.4 கடிதங்களை எழுதுவார். | • பாட்டிக்குக் கடிதம் எழுதுதல் | • இலகுவான சிறிய வாக்கியங்களைக் கொண்ட கடிதங்களை எழுதுவார். | 03 |
| | 4.5 தகவல்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார். | • நத்தார் பண்டிகையில் பங்குபற்றிய அனுபவம் | • சம்பவங்கள், நிகழ்வுகள் தொடர்பாக சிறிய வாக்கியங்களைக் கொண்ட பந்திகளை எழுதுவார். | 02 |

# கற்றல் - கற்பித்தற்
# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : சுய விபரத்தைக் கூறல்

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள்** :

- ஆசிரியர் உச்சரிக்கும் சொற்களை அவதானமாகக் கேட்டுத் துலங்குவார்.
- பண்பான சொற்களைச் செவிமடுத்துக் கிரகித்து வெளிப்படுத்துவார்.
- தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறுவார்.
- பொருத்தமான இடங்களில் உறவுப் பெயர்களைப் பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- தரம் - 6 இல் கற்பித்த விடயங்களை ஞாபகப்படுத்துங்கள்.
- உரையாடல் ஒன்றை ஒலி / ஒளி நாடாக்கள் ஊடாக, அவதானித்துக் கேட்க வழிப்படுத்துங்கள். அல்லது மாணவர் ஒருவருடன் உரையாடி, செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- குடும்ப அங்கத்தவர்கள் / உறவுப் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
  **உ-ம்:** அப்பா அம்மா அக்கா அண்ணா
- மாணவர்கள் மீண்டும் மீண்டும் அவற்றைச் செவிமடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உரையாடல்களில் வரும் புதிய சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள்.
- அறிமுகப்படுத்திய சொற்களைக் கொண்டு உரையாட வழிகாட்டுங்கள்.
- சுய விபரங்களை ஏனையவர்களுடன் கலந்துரையாடிக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் ஒருவர் தனது குடும்ப அங்கத்தவர் பற்றிக் கூறும்போது, ஏனைய மாணவர்கள் அவற்றை அவதானமாகக் கேட்டு, சரியான துலங்கலை வெளிக்காட்ட வழிநடத்துங்கள். இவ்வாறே, எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| அம்மா | அப்பா | அண்ணா | அக்கா |
| தம்பி | தங்கை | நான் | நண்பன் |
| பெயர் | ஊர் | ஆசிரியர் | வைத்தியர் |
| வடை | தோசை | கொழுக்கட்டை | மோதகம் |
| வாழைப்பழம் | மாம்பழம் | விருப்பம் | நன்றி |
| வணக்கம் | | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடநூல்
- இலகுவான சொற்கள் அடங்கிய அட்டைகள், படங்கள்
- மேற்றலை எறியி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- அன்றாடம் பயன்படுத்தும் பண்பான சொற்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- பண்பான உரையாடலில் இடம் பெறும் விடயங்களைக் கிரகித்துத் துலங்குவார்.
- கேட்கப்படும் வினாக்களை விளங்கி, விடை கூறுவார்.
- தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறுவார்.

பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

படத்தைப் பார்த்து வாசிப்போம்.



இவர் எனது அம்மா



இவர் எனது அப்பா




விவேகா



இவர் எனது அக்கா



இவர் எனது அண்ணா



இவர் என் தம்பி



இவர் என் தங்கை





கொழுக்கட்டை

மோதகம்



மாம்பழம்






வாழைப்பழம்





உழுந்து வடை

தோசை

## சுய விபரம்

எனது பெயர் விவேகா.
எனது அம்மாவின் பெயர் கமலா.
எனது அம்மா ஓர் ஆசிரியர்.
எனது அப்பா பெயர் பாலா.
எனது அப்பா ஒரு வைத்தியர்.
எனது நண்பன் பெயர் சம்பத்.

எனது அக்கா பெயர் அருணா.
எனது அண்ணா பெயர் சிவா.
எனது தம்பி பெயர் கமல்.
எனது தங்கை பெயர் மாலா.
எனது ஊர் புத்தளம்.

| | | |
|---|---|---|
| நான் | - | எனது<br>எனக்கு<br>என்னுடைய |
| நீங்கள் | - | உங்கள்<br>உங்களது<br>உங்களுக்கு<br>உங்களுடைய |

எனக்கு கொழுக்கட்டை விருப்பம்.
எனக்கு மோதகம் விருப்பம்.
எனக்கு மாம்பழம் விருப்பம்.
எனக்கு வாழைப்பழம் விருப்பம்.
எனக்கு வடை விருப்பம்.
எனக்கு தோசை விருப்பம்.

### உரையாடல் - 1

**விவேகா:** எனது பெயர் விவேகா.
உங்கள் பெயர் என்ன?

**மாலா:** எனது பெயர் மாலா.
உங்கள் அம்மா பெயர் என்ன?

**விவேகா:** எனது அம்மாவின் பெயர் கமலா.

| | | |
|---|---|---|
| அம்மா | - | அம்மாவின் |
| அப்பா | - | அப்பாவின் |
| அக்கா | - | அக்காவின் |
| அண்ணா | - | அண்ணாவின் |
| தம்பி | - | தம்பியின் |
| தங்கை | - | தங்கையின் |

### உரையாடல் - 2

**மாலா:** எனது ஊர் நயினாதீவு.
உங்கள் ஊர் எது?

**விவேகா:** எனது ஊர் புத்தளம்.

### உரையாடல் - 3

**மாலா:** எனக்கு தோசை விருப்பம்.
உங்களுக்கு என்ன விருப்பம்?

**விவேகா:** எனக்கு வடை விருப்பம்.

# சொற்களஞ்சியம்

நான் - මම

எனது - මගේ

எனக்கு - මට

உங்களுடைய - ඔයාගේ

ஆசிரியர் - ගුරුවරයා

வைத்தியர் - වෛද්‍යවරයා

அம்மா - අම්මා

அப்பா - තාත්තා

அண்ணா - අයියා

அக்கா - අක්කා

பெயர் - නම

நண்பன் - යාළුවා

ஊர் - ගම

கொழுக்கட்டை - කොළුක්කට්ටෙ

மோதகம் - මෝදහම්

மாம்பழம் - ඉදුණු අඹ

வாழைப்பழம் - ඉදුණු කෙසෙල්

வடை - වඩේ

தோசை - තෝසෙ

முறுக்கு - මුරුක්කු

விருப்பம் - කැමතියි

என்ன ? - මොකක්ද ? / මොනවද ?

எது ? - කුමක්ද ?

**தேர்ச்சி** 1.0 : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.1 : பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : நண்பனைப் பற்றிக் கூறல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :

- பண்பான சொற்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- பண்பான உரையாடல்களை அவதானமாகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- நண்பருடன் பண்பாக, உரையாடி விபரங்களைச் சேகரிப்பார்.
- நண்பனைப் பற்றிய விபரங்களைக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- ஒலி / ஒளிச் சாதனங்களை ஒலி / ஒளி பரப்புவதனூடாக, பண்பான உரையாடல் ஒன்றைச் செவிமடுக்கச் செய்யுங்கள் / காட்சிப்படுத்துங்கள்.
- உரையாடல்களில் வரும் புதிய சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாக்கி, உரையாடல் மூலம் நண்பனைப் பற்றிய விபரங்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.
- நண்பனைப் பற்றிச் சேகரித்த விபரங்களை முன்வைப்பதற்கு, எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பமளியுங்கள்.
- இடர்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| தாய் | தந்தை | ஆசிரியர் | தாதி | நண்பன் |
| விவசாயி | சாரதி | இல்லத் தலைவி | முறுக்கு | அன்னாசி |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- படங்கள், சொல்லட்டைகள், ஒலி / ஒளிச் சாதனங்கள்
- பாடநூல்
- மேற்றலை எறியி (OHP)

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- அன்றாடம் பயன்படுத்தும் பண்பான சொற்கள், உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- பண்பான சொற்களை செவிமடுத்து, அவற்றைப் பயன்படுத்துவார்.
- நண்பனைப் பற்றிய விபரங்களை அவதானமாகச் செவிமடுத்துக் கூறுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

**உரையாடல் - 1**

| | |
|---|---|
| **விவேகா:** | எனது பெயர் விவேகா.<br>உங்கள் பெயர் என்ன? |
| **சம்பத்:** | எனது பெயர் சம்பத். |
| **விவேகா:** | எனது தாயின் பெயர் கமலா.<br>உங்கள் தாயின் பெயர் என்ன? |
| **சம்பத்:** | எனது தாயின் பெயர் விமலா. |
| **விவேகா:** | எனது தந்தையின் பெயர் பாலா.<br>உங்கள் தந்தையின் பெயர் என்ன? |
| **சம்பத்:** | எனது தந்தையின் பெயர் ரவி. |

---

| | |
|---|---|
| **விவேகா:** | எனது ஊர் புத்தளம்.<br>உங்கள் ஊர் எது? |
| **சம்பத்:** | எனது ஊர் வவுனியா. |

---

| | |
|---|---|
| **விவேகா:** | எனது தாய் ஓர் ஆசிரியர். உங்கள் தாய்.............? |
| **சம்பத்:** | எனது தாய் ஓர் இல்லத் தலைவி. |
| **விவேகா:** | எனது தந்தை ஒரு வைத்தியர். உங்கள் தந்தை.............? |
| **சம்பத்:** | எனது தந்தை ஒரு சாரதி. |

**எனது நண்பன்**

எனது நண்பன் பெயர் சம்பத்.
எனது நண்பனின் தாய் பெயர் விமலா.
எனது நண்பனின் தாய் ஓர் இல்லத்தலைவி.
எனது நண்பனின் தந்தை பெயர் ரவி.
எனது நண்பனின் தந்தை ஒரு சாரதி.

| | | |
|---|---|---|
| நண்பன் | - | நண்பனின் |
| | | நண்பனது |
| | | நண்பனுக்கு |
| | | நண்பனுடைய |

எனது நண்பனின் ஊர் வவுனியா.

எனது நண்பனுக்கு அன்னாசி விருப்பம்.
எனது நண்பனுக்கு வடை விருப்பம்.

உங்கள் பெயர் என்ன?
உங்கள் தாயின் பெயர் என்ன?
உங்கள் தந்தையின் பெயர் என்ன?
உங்கள் ஊர் எது?

எனது பெயர் சம்பத்.
எனது தாயின் பெயர் விமலா.
எனது தந்தையின் பெயர் ரவி.
எனது ஊர் வவுனியா.

## சொற்களஞ்சியம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆசிரியர் | - | ගුරුවරයා | வியாபாரி | - | ව්‍යාපාරිකයා |
| வைத்தியர் | - | වෛද්‍යවරයා | தாதி | - | හෙදිය |
| சாரதி | - | රියදුරා | விவசாயி | - | ගොවියා |
| இல்லத்தலைவி | - | ගෘහණිය | | | |
| தாய் | - | මව | அன்னாசி | - | අන්නාසි |
| தந்தை | - | පියා | முறுக்கு | – | මුරුක්කු |
| பெயர் | - | නම | ஊர் | - | ගම |

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : அ. மழைப்பாடல்
ஆ. மழை நாளில் பின்பற்றவேண்டிய அறிவுறுத்தல்கள்

**பாடவேளை:** : 04

**கற்றற் பேறுகள்** :

- பாடலை அவதானமாகச் செவிமடுப்பார்.
- பாடலைச் செவிமடுத்துத் தாளம் போடுவார்.
- அறிவுறுத்தல்களை அவதானமாகச் செவிமடுப்பார்.
- எளிமையான அறிவுறுத்தல்களுக்குத் துலங்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மழைப்பாடலைப் பாடிக் காட்டுங்கள்.
- மழைப்பாடலைப் தாளத்தோடு பாட வழிப்படுத்துங்கள்.
- மழை நாளில் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் அவற்றை மீண்டும், மீண்டும் பார்க்கவும் கேட்கவும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, அறிவுறுத்தல்களுக்கு இயங்க வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| வானம் | மேகம் | இடி | மின்னல் | மழை |
| வயல் | நெல் | தேசம் | பாதுகாப்பு | தொலைக்காட்சிப் பெட்டி |
| மின்சாதனங்கள் | | | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - மழைப்பாடல்
- சொல் அட்டைகள், படங்கள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள் :**

- சொல் அட்டைகளில் உள்ள அறிவுறுத்தல்களை அவதானமாகக் கேட்டுத் துலங்குவார்.
- அறிவுறுத்தல்களை விளங்கி, துலங்குவார்.
- பாடலைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- பாடலை விளங்கி, தாளம் போடுவார்.

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

- இங்கே வாருங்கள்.
- இருங்கள்.
- ஓடுங்கள்.
- நிறுத்துங்கள்.
- உள்ளே போங்கள்.
- வெளியே வாருங்கள்.

| | | |
|---|---|---|
| வா | - | வாருங்கள் |
| இரு | - | இருங்கள் |
| ஓடு | - | ஓடுங்கள் |
| நிறுத்து | - | நிறுத்துங்கள் |
| போ | - | போங்கள் |

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| வானம் | - | අහස |
| மேகம் | - | වලාකුළ |
| இடி | - | අකුණු |
| மின்னல் | - | විදුලි |
| மழை | - | වැස්ස |
| வயல் | - | කුඹුර |
| நெல் | - | වී |
| தேசம் | - | දේශය |
| கறுக்க வேணும் | - | කළු වෙන්න ඕනෑ |
| பொழிய வேணும் | - | වහින්න ඕනෑ |
| விளைய வேணும் | - | පැළවෙන්න ඕනෑ |
| சிறக்க வேணும் | - | යහපත් වෙන්න ඕනෑ |
| தொலைக்காட்சிப் பெட்டி | - | රූපවාහිනිය |
| தொலைபேசி | - | දුරකථනය |
| மின்சாதனங்கள் | - | විදුලි උපකරණ |
| பாதுகாப்பு | - | ආරක්ෂාව |

## பின்னிணைப்பு -1

### மழைப்பாடல்

அ. வானம் கறுக்க வேணும் - மழை
வயற் காடெல்லாம் பொழிய வேணும்
தேனாய் நெல்லு விளைய வேணும் - எங்கள்
தேசமெங்கும் சிறக்க வேணும்.

### அறிவுறுத்தல்கள்

ஆ. வெளியில் செல்ல வேண்டாம்.
திறந்த வெளியில் நிற்க வேண்டாம்.
மரத்தின் கீழ் நிற்க வேண்டாம்.

தொலைக்காட்சிப் பெட்டியை நிறுத்துங்கள்.
தொலைபேசி இணைப்பைத் துண்டியுங்கள்.
மின்சாதனங்களை நிறுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : கடைக்குச் செல்லும் வழியை விசாரித்தல்.

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- வழங்கப்பட்ட வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- செவிமடுத்த தகவல்களைக் கொண்டு சரியான வழியைக் கண்டறிவார்.
- முக்கியமான விடயங்களைக் கிரகித்து செயற்படுவார்.
- வழிகாட்டல்களைப் பெற்று அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடநூலில் உள்ள வழிகாட்டுதலைப் பயன்படுத்துங்கள்.
- ஆசிரியர் கூறும்போது, மாணவரை அவதானமாகச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் செவிமடுத்தவைக்கு ஏற்ப, துலங்குவதற்கு சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர்கள் இடர்படும்போது உதவிசெய்து, ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாக்கி, கடைக்குச் செல்லும் வழியை விசாரித்து, துலங்க வழிகாட்டுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| மாடி | கட்டடம் | புத்தகக் கடை | பக்கம் | நேரே |
| மேலே | வழி | சிறு வீதி | பிரதான வீதி | மீற்றர் |
| உள்ளே | செல்லுங்கள் | திரும்புங்கள் | சரி | இல்லை |
| எத்தனையாம் | வலது | இடது | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- சொல் அட்டைகள், மாதிரி உரையாடல்கள்
- மேற்றலை எறியி (OHP)

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடத்திலுள்ள புதிய சொற்களை செவிமடுத்துத் துலங்குவார்.
- சொற்களை அறிந்து, அவற்றைப் பயன்படுத்தி உரையாடுவார்.
- சரியான வழியை அறிவதில் ஆர்வத்துடன் செயற்படுவார்.
- வழிகாட்டல்களுக்கேற்பத் துலங்குவார்.

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

- நேராகச் செல்லுங்கள்.
- பிரதான வீதியில் செல்லுங்கள்.
- உள்ளே செல்லுங்கள்.
- கடைக்குச் செல்லுங்கள்.
- வலது பக்கம் (வலப் பக்கம்) திரும்புங்கள்.
- இடது பக்கம் (இடப் பக்கம்) திரும்புங்கள்.

| | | |
|---|---|---|
| போ | - | போங்கள் |
| செல் | - | செல்லுங்கள் |
| திரும்பு | - | திரும்புங்கள் |
| ஏறு | - | ஏறுங்கள் |

## கடைக்குச் செல்லும் வழியை விசாரித்தல்

**விவேகா:** சாரதா புத்தகக் கடை எங்க இருக்கு?

**மாலா:** நேரே போங்க.

**விவேகா:** எவ்வளவு தூரம்?

**மாலா:** ஐம்பது மீற்றர் போய், இடது பக்கம் திரும்புங்க.

**விவேகா:** சரி. பின்பு..............

**மாலா:** பிரதான வீதியில் வலது பக்கம், ஒரு கட்டடம் உள்ளது. அந்தக் கட்டடத்தின் மேலே ஏறுங்க.

**விவேகா:** எத்தனையாம் மாடி?

**மாலா:** இரண்டாம் மாடியில் முதலாவது கடை.

**விவேகா:** நன்றி.

## சொற்களஞ்சியம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்டடம் | - | ගොඩනැගිල්ල | மாடி | - | මහල |
| பக்கம் | - | පැත්ත | புத்தகக் கடை | - | පොත්හල |
| பிரதான வீதி | - | ප්‍රධාන පාර | சிறு வீதி | - | පටු මග |
| வழி | - | මග | மீற்றர் | - | මීටරය |
| நேரே | - | කෙළින් | மேலே | - | උඩ |
| உள்ளே | - | ඇතුළේ | சரி | - | හරි |
| திரும்புங்கள் | - | හැරෙන්න | எத்தனையாம் | - | කී වැනි |
| போங்கள் | - | යන්න | ஏறுங்கள் | - | නගින්න |
| நன்றி | - | ස්තුතියි | | | |
| இல்லை | - | නැහැ | | | |

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : வகுப்பறையைச் சுத்தமாக வைத்திருத்தல் தொடர்பான அறிவித்தல்

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- மிக இலகுவான அறிவித்தல்களைச் செவிமடுப்பார்.
- இலகுவான அறிவித்தல்களுக்குத் துலங்குவார்.
- வகுப்பறையில் இடம்பெறும் அறிவித்தல்களுக்குச் சரியாகத் துலங்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மிக இலகுவான அறிவித்தல்களைப் படங்களுடன் காட்சிப்படுத்துங்கள்.
- அந்த அறிவித்தல்களை வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்கள் அவற்றை அவதானமாகச் செவிமடுத்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக இயங்க வழிப்படுத்துங்கள்.
- வகுப்பறைச் சுத்தம் தொடர்பான அறிவித்தல்களை வழங்கி, மாணவர்களைத் துலங்க வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| பாடசாலை | வகுப்பறை | மேசை | கதிரை |
| சுற்றாடல் | சுத்தம் | குப்பை | ஒழுங்கு |
| வைப்போம் | போடுவோம் | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- படங்கள், சொல்லட்டைகள்
- இலகுவான அறிவித்தல்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- இலகுவான அறிவித்தல்களைச் செவிமடுப்பார்.
- அறிவித்தல்களுக்கு ஏற்பச் செயற்படுவார்.
- சுத்தம் தொடர்பான அறிவித்தல்களைக் கூறுவார்.
- வகுப்பறையில் கூறப்படும் அறிவித்தல்களுக்கு ஏற்பத் துலங்குவார்.
- பல்வேறு நிகழ்வுகளுக்கான அறிவித்தல்களை முன்வைப்பார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

### வகுப்பறைச் சுத்தம் தொடர்பான அறிவித்தல்

- மேசையைச் சுத்தமாக வைப்போம்.
- கதிரைகளை ஒழுங்காக வைப்போம்.
- வகுப்பறையைச் சுத்தமாக வைப்போம்.
- பாடசாலையைச் சுத்தமாக வைப்போம்.
- சுற்றாடலைச் சுத்தமாக வைப்போம்.
- குப்பைகளை உரிய இடத்தில் போடுவோம்.

| | | |
|---|---|---|
| சுத்தம் | - | சுத்தமாக |
| ஒழுங்கு | - | ஒழுங்காக |

### சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| மேசை | - | මේසය |
| கதிரை | - | පුටුව |
| வகுப்பறை | - | පන්ති කාමරය |
| பாடசாலை | - | පාසල |
| சுற்றாடல் | - | පරිසරය |
| குப்பை | - | කසල |
| சுத்தம் | - | පිරිසුදු |
| ஒழுங்காக | - | පිළිවෙලට |
| வைப்போம் | - | තබමු |
| போடுவோம் | - | දමමු |

**தேர்ச்சி 1.0** : நாளாந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புக்களையும் பாடல்களையும் செவிமடுத்து இரசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இலகுவான பாடல்: "ஆடிப் பிறப்புக்கு ...."

**பாடவேளை:** : 04

**கற்றற் பேறுகள்** :

- ஒலிநாடாக்களில் ஒலிபரப்பாகும் பாடல்களை விருப்பத்துடன் செவிமடுப்பார்.
- பாடல்களைச் செவிமடுத்து இரசிப்பார்.
- பாடல்களைத் தாளத்துடன் பாடுவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- பாடல்களின் விளக்கத்தைக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலைப் பாடி, மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- பாடலை, மீண்டும் மீண்டும் செவிமடுக்க இடமளியுங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் பாடலைப் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பாடலில் இடம்பெறும் உணவுப் பண்டங்களின் பெயர்களைக் கூறச் செய்யுங்கள்.
- உணவுப் பண்டங்களைப் படத்தில் இனங்காணச் செய்யுங்கள்.
- ஆடிப் பிறப்பு கொண்டாடும் முறையை வகுப்பறையில் செய்து காட்டுங்கள்.
- மாணவர்கள் இடர்படும்போது உதவி செய்து, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| ஆடிப் பிறப்பு | விடுதலை | தோழர் | செந்நெல் |
| பச்சையரிசி | பாசிப்பயறு | தேங்காய் | சர்க்கரை |
| வெல்லக் கலவை | மா | வில்லை | கொழுக்கட்டை |
| பனங்கட்டிக் கூழ் | கூழ் | குடிக்கலாம் | தின்ன லாம் |
| ஆனந்தம் | வறுத்தல் | இடித்தல் | அவித்தல் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - பாடல்
- ஒலிநாடா
- பொருத்தமான படங்கள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலை விருப்பத்துடன் செவிமடுப்பார்.
- பாடலில் வரும் புதிய சொற்களை இனங்காண்பார்.
- குழுவாகவும் தனியாகவும் பாடலைத் தாளத்துடன் பாடுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

பனங்கட்டிக் கூழ் குடிப்போம்.

கொழுக்கட்டை தின்போம் / உண்போம்.

| | | |
|---|---|---|
| குடி | - | குடிப்போம் |
| உண் | - | உண்போம் |

| | | |
|---|---|---|
| தோழர் | - | தோழர்களே |
| நண்பர் | - | நண்பர்களே |
| சிறுவர் | - | சிறுவர்களே |
| மாணவர் | - | மாணவர்களே |

| | | |
|---|---|---|
| பருப்பு | - | பருப்பை |
| கூழ் | - | கூழை |
| கொழுக்கட்டை | - | கொழுக்கட்டையை |
| மா | - | மாவை |

## சொற்களஞ்சியம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆடிப் பிறப்பு | - | ඇසළ උදාව | வறுத்தல் | - | බැදීම |
| விடுதலை | - | නිවාඩුව / නිදහස් | அவித்தல் | - | තැම්බීම |
| தோழர் | - | යාළුවා / මිතුරා | இடித்தல் | - | කොටනවා |
| பனங்கட்டிக் கூழ் | - | තල්කැඳ | வெல்லக் கலவை | - | සීනි මිශ්‍රණය |
| பாசிப்பயறு | - | මුංඇට | கூழ் | - | කැඳ |
| பச்சையரிசி | - | කැකුළුහාල් | செந்நெல் | - | රත්වන් වී |
| தேங்காய் | - | පොල් | சர்க்கரை | - | හකුරු |
| தோண்டி | - | එක්තරා භාජනයක් | மா | - | පිටි |
| ஆனந்தம் | - | සතුට | தின்னலாம் | - | කන්න පුළුවන් |
| குடிக்கலாம் | - | බොන්න පුළුවන් | | | |

## ஆடிப் பிறப்பு

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே! 1.

பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து 2.

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு 3.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே. 4.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : வீட்டிற்கு அயலில் நடக்கும் எளிமையான அறிவுறுத்தல்கள்: விளையாடும் சந்தர்ப்பம்

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- இலகுவான அறிவுறுத்தல்களைக் கேட்டுத் துலங்குவார்.
- பொது இடங்களில் பயன்படுத்தக்கூடிய அறிவுறுத்தல்களை இனங்கண்டு கூறுவார்.
- இலகுவான அறிவுறுத்தல்களை வழங்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- இலகுவான அறிவுறுத்தல்களை வழங்கி, அதற்கேற்பச் செயற்பட வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாகப் பிரித்து, ஒருவர் மாறி ஒருவர் தாமாக அறிவுறுத்தல்களைக் கூறிச் செயற்பட வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் இடர்படும்போது உதவி செய்யுங்கள்.
- மாணவர்கள் வகுப்பறையில் தமிழில் உரையாடுவதற்கு, சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| பந்து | பொருட்கள் | அனைவரும் | விளையாட்டு விதி |
| முன்னால் | வேகமாக | குழுவாக | ஒற்றுமையாக |
| எடுங்கள் | அடியுங்கள் | வையுங்கள் | ஒன்று சேருங்கள் |
| விளையாடுங்கள் | செல்லுங்கள் | பின்பற்றுங்கள் | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- சொல்லட்டைகள், விளையாட்டுக்குரிய பொருட்கள்
- ஒலி / ஒளிப்பதிவு நாடா

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- அறிவுறுத்தல்களைக் கேட்டுத் துலங்குவார்.
- அன்றாடம் பயன்படுத்தக்கூடிய இலகுவான அறிவுறுத்தல்களைக் கூறுவார்.
- அன்றாடம் பயன்படுத்தப்படும் அறிவுறுத்தல்களைக் குழுவாகவும் தனித்தும் பின்பற்றி, துலங்குவார்.
- செயற்பாடுகளில் ஈடுபடும்பொழுது அறிவுறுத்தல்களை வழங்குவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

- உங்கள் பொருட்களை இங்கே வையுங்கள்.
- அனைவரும் ஒன்று சேருங்கள்.
- பந்தை எடுங்கள்.
- முன்னால் செல்லுங்கள்.
- வேகமாக அடியுங்கள்.
- குழுவாக விளையாடுங்கள்.
- ஒற்றுமையாக விளையாடுங்கள்.
- விளையாட்டு விதிகளைப் பின்பற்றுங்கள்.

| | | |
|---|---|---|
| வை | - | வையுங்கள் |
| சேர் | - | சேருங்கள் |
| எடு | - | எடுங்கள் |
| செல் | - | செல்லுங்கள் |
| அடி | - | அடியுங்கள் |
| விளையாடு | - | விளையாடுங்கள் |
| பின்பற்று | - | பின்பற்றுங்கள் |

## சொற்களஞ்சியம்

| | |
|---|---|
| பொருட்கள் | - භාණ්ඩ |
| விளையாட்டு விதி | - ක්‍රීඩා නීතිරීති |
| பந்து | - පන්දුව |
| அனைவரும் | - හැමෝම/ සියලුදෙනාම |
| முன்னால் | - ඉදිරියේ |
| வேகமாக | - වේගයෙන් |
| குழுவாக | - කණ්ඩායම් වශයෙන් |
| ஒற்றுமையாக | - එකමුතුවෙන්/ සමගියෙන් |
| வையுங்கள் | - තබන්න |
| எடுங்கள் | - ගන්න |
| ஒன்று சேருங்கள் | - එකතුවන්න |
| செல்லுங்கள் | - යන්න |
| அடியுங்கள் | - ගහන්න |
| விளையாடுங்கள் | - සෙල්ලම් කරන්න |
| பின்பற்றுங்கள் | - පිළිපදින්න / අනුගමනය කරන්න |

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : இலகுவான உரையாடல்:
பிரதேச செயலகத்திற்குச் செல்ல வழி கேட்கும் சந்தர்ப்பம்

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- இலகுவான வழிநடத்தல்களை இனங்கண்டு துலங்குவார்.
- அன்றாடம் பயன்படுத்தப்படும் வழிநடத்தல்களை முன்வைப்பார்.
- குறிப்பிட்ட இடத்திற்குப் போவதற்கான வழியை விசாரிப்பார்.
- இலகுவான வழிநடத்தல்களை அன்றாடம் கையாள்வார்.
- பெற்றுக்கொண்ட தகவல்களைப் பின்பற்றி, உரிய இடத்துக்குச் செல்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பிரதேச செயலக மாதிரி ஒன்றை வடிமைத்து, அதனைப் பிரதி செய்யுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, பிரதி செய்தவற்றை வழங்குங்கள்.
- பிரதேச செயலகத்திற்கு வரும் வழியைக் கூறுவதற்கு, ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான சொற்களைக் கையாண்டு, தாம் செல்லும் இடத்திற்கு வழியை விசாரிக்கவும் வழிநடத்தவும் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- மாணவர்கள் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்கள் வகுப்பறையில் தமிழில் உரையாடுவதற்கு, சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| பிரதேச செயலகம் | இரண்டாவது | நான்காவது | ஒழுங்கை |
| வலமாக | இடமாக | முன்னால் | பின்னால் |
| பக்கம் | செல்லுங்கள் | திரும்புங்கள் | எவ்வாறு? |
| எப்படி ? | அதிக தூரமா? | நன்றி | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- சொல் அட்டைகள்
- பிரதேச செயலகத்தின் மாதிரிகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள் :**

- இலகுவான வழிநடத்தல்களுக்கு ஏற்பத் துலங்குவார்.
- வினாக்களை வினாவி, தாம் செல்ல உள்ள இடத்திற்கான வழியை விசாரிப்பார்.
- இலகுவான முறையில் வழிநடத்தல்களை மேற்கொள்வார்.
- வழிநடத்தல்களைப் பின்பற்றி, உரிய இடத்தைக் கண்டறிவார்.

## பயிற்சிப் பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

**அமுதா:** பிரதேச செயலகத்திற்கு எப்படிப் போகலாம்?

**மலர்:** பிரதான வீதியில் நேரே போய், வலது பக்கம் திரும்புங்கள். அதில் தபாற் கந்தோர் இருக்கு. அதைத் தாண்டி, சிறிது முன்னால் போங்கள்.

**அமுதா:** சரி. பிறகு.....

**மலர்:** அதில் வரும் இரண்டாம் ஒழுங்கையில் நாலாவது கட்டடம்.

**அமுதா:** நன்றி.

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகம் | - | ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය |
| தபாற் கந்தோர் | - | තැපැල් කන්තෝරුව |
| கட்டடம் | - | ගොඩනැගිල්ල |
| வழி | - | මාර්ගය / පාර |
| ஒழுங்கை | - | පටුමග |
| சிறிது | - | ටිකක් / ස්වල්පයක් |
| முன்னால் | - | ඉස්සරහට / ඉදිරියට |
| வலமாக | - | දකුණෙන් |
| இடமாக | - | වමෙන් |
| இரண்டாம் | - | දෙවන |
| நான்காம் / நாலாம் | - | හතරවන |
| சரி | - | හරි |
| இல்லை | - | නැත |
| நன்றி | - | ස්තුති |
| தாண்டி / கடந்து | - | පසුකර |
| போங்கள் | - | යන්න |
| திரும்புங்கள் | - | හැරෙන්න |
| அதிக தூரமா? | - | ගොඩාක් / බොහෝ දුරද ? |
| எப்படிச் செல்வது? | - | කොහොමද යන්නෙ ? |

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 2.0** | : | பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம் 2.3** | : | நட்பு ரீதியாக உரையாடுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | இலகுவான உரையாடல்:<br>நண்பர்களின் உரையாடல்களில் வேறு ஒரு நண்பர் பங்கேற்று அறிமுகமாகும் சந்தர்ப்பம் |
| **பாடவேளை:** | : | 03 |

**கற்றற் பேறுகள் :**

- தன்னை அறிமுகப்படுத்துவார்.
- தகவல்களைப் பெறுவதற்கு, இலகுவான வினாக்களை வினவுவார்.
- பண்பான சொற்களைக் கையாண்டு, உரையாடுவார்.
- பண்பாக உரையாடி, கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :

- நட்பு ரீதியான மாதிரி உரையாடலை நடித்துக் காட்டுங்கள்.
- தம்மை அறிமுகப்படுத்துவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைச் சோடிகளாகப் பிரித்து, உரையாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான புதிய சொற்களைக் கையாண்டு, நட்புரீதியாக உரையாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- தாம் உரையாடி அறிந்த விடயங்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| நான் | அங்கே | எங்கே? | இயலுமா? | உதவ முடியுமா? |
| வணக்கம் | நிச்சயமாக | உதவுகிறேன் | வருகிறேன் | போக வேண்டும் |
| இருந்து | | | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- ஒலி / ஒளிப்பதிவு இறுவட்டுக்கள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- இலகுவான சொற்களைக் கொண்டு தன்னை அறிமுகப்படுத்துவார்.
- இலகுவான சொற்களைக் கொண்டு, வினாக்களை வினாவுவார்.
- பண்பான சொற்களைக் கொண்டு நட்பு ரீதியாக உரையாடுவார்.
- உரையாடுவதன் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்.
- உரையாடி அறிந்த விடயங்களை முன்வைப்பார்.

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**பாத்திமா:** வணக்கம். என் பெயர் பாத்திமா. நான் கல்முனையில் இருந்து வருகிறேன். எனக்கு உதவ முடியுமா?

**பாமா :** நான் பாமா. நிச்சயமாக உதவுகிறேன். நீங்கள் எங்கே போக வேண்டும்?

**பாத்திமா:** நான் நுகேகொடைக்குப் போக வேண்டும்.

**பாமா :** வாருங்கள் பாத்திமா. நானும் அங்கேதான் போகிறேன்.

**பாத்திமா:** நன்றி பாமா.

**நிலந்தி :** பாத்திமா, எங்கே போகிறீர்கள்? இவர் யார்?

**பாத்திமா:** நான் நுகேகொடைக்குப் போகிறேன்.
இவர் பாமா. நீங்கள் எங்கே போகிறீர்கள்?

**நிலந்தி :** நான் வீட்டுக்குப் போகிறேன்.

**பாத்திமா:** சரி. வரட்டுமா? மீண்டும் சந்திப்போம்.

**சொற்களஞ்சியம்**

| | | |
|---|---|---|
| வணக்கம் | - | ආයුබෝවන් |
| நான் | - | මම |
| அங்கே | - | එහි |
| எங்கே | - | කොහෙද? |
| உதவ முடியுமா? | - | උදවු වෙන්න පුළුවන්ද? |
| இயலுமா? | - | හැකිද ? |
| இருந்து | - | සිට |
| நிச்சயமாக | - | අනිවාර්යයෙන්ම |
| உதவுகிறேன் | - | උදව් කරන්නම් |
| வருகிறேன் | - | එන්නම් |
| போக வேண்டும் | - | යන්න ඕනෑ / යා යුතුයි |

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : விழா ஒன்றுக்குச் செல்வதற்கு ஆயத்தமாதல்: புதுமனை புகுவிழா

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- பண்பான முறையில் செவிமடுத்து, அதற்கேற்பத் துலங்குவார்.
- இலகுவான சொற்களைக் கையாண்டு உரையாடுவார்.
- பொருத்தமான வினாக்களைக் கேட்டு, புதுமனை புகுவிழா பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- புதுமனை புகுவிழாவில் இடம்பெறும் நடைமுறைகளைக் கூறுவார்.
- ஏனையோரின் பண்பாடுகளுக்கு மதிப்பளிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்களுக்கு விருப்பமான விழாவைத் தெரிவுசெய்து, அது தொடர்பாக உரையாட வழிப்படுத்துங்கள்.
- புதுமனை புகுவிழாவில் கடைப்பிடிக்கும் நடைமுறைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்யுங்கள்.
- மாணவர் தாம் அறிந்த விடயங்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வகுப்பறையில் 'புதுமனை புகுவிழா' ஒன்றை நிகழ்த்திக் காட்டுங்கள்.
- இலகுவான வினாக்களை வினாவி, தகவல்களைச் சேகரிக்க வழிகாட்டுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| கோயில் பூசகர் | உற்றார் | உறவினர் | நண்பர் | குடும்பம் |
| புதுமனை புகுவிழா | சுபநேரம் | சமயக்கிரியை | வீடு | துப்பரவு |
| சுவாமிப்படங்கள் | குத்து விளக்கு | நிறைகுடம் | கண்ணாடி | பணப்பொதி |
| உப்பு | மஞ்சள் | தென்னங்கன்று | நெல் | தாம்பூலம் |
| கிருக சாந்தி | விருந்தோம்பல் | கொண்டாடுதல் | கழுவுதல் | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- ஒலி / ஒளிப்பதிவு இறுவட்டுக்கள்
- விழாக்கள் தொடர்பான படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- விழா ஒன்று பற்றிய தகவல்களை அறிய, பொருத்தமான வினாக்களைக் கேட்டு உரையாடுவார்.
- புதுமனை புகுவிழாவில் கலந்து கொண்டு, தகவல்களைச் சேகரிப்பார்.
- தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார்.
- புதுமனை புகுவிழாவில் இடம்பெறும் நிகழ்வுகளைக் கூறுவார்.

**பயிற்சிப் பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**புதுமனை புகுவிழா**

**பாலா** : விழாவுக்குப் போவோமா?

**உபாலி** : என்ன விழா?

**பாலா** : இன்றைக்கு விவேகாவின் புதுமனை புகுவிழா.

**உபாலி** : புதுமனை புகுவிழா என்றால் என்ன?

**பாலா** : புதுமனை புகுதல் என்றால் புதிதாகக் கட்டிய வீட்டுக்குக் குடிபுகுதல். இதனை புதுமனை புகுவிழா என்று கூறுவர்.

**உபாலி** : புதுமனை புகுவிழாவை எப்படிக் கொண்டாடுவீர்கள்?

**பாலா** : முதல் நாளில் வீட்டைக் கழுவி, துப்பரவு செய்வோம். பிறகு கோயில் பூசகர் வந்து கிருக சாந்திக் கிரியையைச் செய்வார்.

**உபாலி** : பிறகு என்ன செய்வீர்கள்?

**பாலா** : முதன் முதலாக வீட்டினுள் செல்லும்போது சுவாமிப்படங்கள், குத்து விளக்கு, நிறைகுடம், கண்ணாடி, பணப்பொதி, மஞ்சள், நெல், தாம்பூலம், தென்னங்கன்று, உப்பு என்பவற்றை எடுத்துச் செல்வோம்.

**உபாலி** : அடுத்து என்ன நடக்கும்?

**பாலா** : கடைசியாக விருந்தோம்பல் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வோம்.

**உபாலீ** : நல்லது. பல விடயங்களை அறிந்து கொண்டேன். இப்ப நாங்க விவேகாவின் புதுமனை புகுவிழாவிற்குப் போவோம்.

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| கோயில் பூசகர் | - කෝවිල් පූජකතුමා | உறவினர் | - නෑදෑයෝ |
| நண்பர் | - යාළුවා | குடும்பம் | - පවුල |
| புதுமனை புகுவிழா | - නවනිවසට ගෙවදීමේ උත්සවය | சுபநேரம் | - සුබ නැකැත |
| சுவாமிப் படங்கள் | - දෙවියන්ගේ පිංතූර | நிறைகுடம் | - පුන්කලස |
| மஞ்சள் | - කහ | தாம்பூலம் | - බුලත් |
| கண்ணாடி | - කණ්ණාඩිය / කැඩපත | தென்னங்கன்று | - පොල් පැළය |
| பணப்பொதி | - මුදල් පසුම්බිය | உப்பு | - ලුණු |
| சமயக் கிரியை | - ආගමික වතාවත් | கிருக சாந்தி | - ගෘහ ශාන්ති කර්ම |
| விருந்தோம்பல் | - ආගන්තුක සත්කාර | விருந்துண்ணல் | - ආහාර අනුභව කිරී |
| துப்பரவு | - පිරිසිදු | கழுவுதல் | - සේදීම |
| கொண்டாடுதல் | - සැමරීම | | |

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.5** : கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுவதற்காக உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : விழா ஒன்றிற்காக உணவுப் பண்டங்களை வாங்குதல்: பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- விழாவிற்குத் தேவையான உணவுப் பண்டங்களைக் கூறுவார்.
- அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முறைகளைக் கேட்டறிவார்.
- பண்டங்களை வாங்குவது தொடர்பான வினாக்களை எழுப்பி உரையாடுவார்.
- கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- நாம் கொண்டாடும் விழாக்களைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- விழாவுக்கு வாங்குகின்ற பொருட்கள் பற்றி, கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பிறர் உரையாடும்போது அவதானமாகச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
- கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குங்கள்.
- மாதிரி கடைகளை அமைத்து நேரடி அனுபவங்களைப் பெற வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| இரண்டு | ஐந்து | பத்து | அறுபது | ஆயிரம் |
| பிஸ்கட் | பெட்டி | பற்றுச்சீட்டு | கணக்கு | மீதி |
| ரூபா | கிலோ | | | |
| தாங்க | இந்தாங்க | வேண்டுமா? | என்ன வேணும்? | |
| என்ன விலை? | எவ்வளவு? | | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- மாதிரி கடைகள், உணவுப் பண்டங்கள், பணம்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்குத் தேவையான உணவுப் பண்டங்களை இனங்கண்டு கூறுவார்.
- சிறிய வாக்கியங்களைக் கொண்டு உரையாடி, உணவுப் பண்டங்களை வாங்குவார்.
- மாதிரிக் கடையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு, அனுபவம் பெறுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

### உணவுப் பண்டங்களை வாங்குதல்

| | |
|---|---|
| **கடைக்காரர்:** | வாங்க. உங்களுக்கு என்ன வேணும்? |
| **பிரதீப்:** | எனக்கு வாழைப்பழம் வேணும். வாழைப்பழம் ஒரு கிலோ என்ன விலை? |
| **கடைக்காரர்:** | அறுபது ரூபா. |
| **பிரதீப்:** | எனக்கு வாழைப்பழம் பத்து கிலோ வேணும்.<br>ரெண்டு அன்னாசியும் ஒரு பெரிய பிஸ்கட் பெட்டியும் தாங்க. |
| **கடைக்காரர்:** | எங்களிடம் மாரி பிஸ்கட் பெட்டிதான் இருக்கு. வேணுமா? |
| **பிரதீப்:** | தாங்க. என்ன விலை? |
| **கடைக்காரர்:** | ஒரு கிலோ மாரி பிஸ்கட் பெட்டி இருநூறு ரூபா. |
| **பிரதீப்:** | இந்தாங்க ஆயிரம் ரூபா. கணக்கு எவ்வளவு? தயவு செய்து<br>பற்றுச் சீட்டையும் தாங்க. |
| **கடைக்காரர்:** | இந்தாங்க. மீதி அறுபது ரூபா. |
| **பிரதீப்:** | நன்றி. போய் வாறேன். |
| **கடைக்காரர்:** | நன்றி. |

### சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| பற்றுச்சீட்டு | - රිසිට්පත | கணக்கு | - ගිණුම |
| மீதி | - ඉතිරි | ரூபா | - රුපියල් |
| கிலோ | - කිලෝ | பெட்டி | - පෙට්ටිය |
| ரெண்டு | - දෙක | பத்து | - දහය |
| அறுபது | - හැට | ஆயிரம் | - දාහයි |
| தாங்க | - දෙන්න | இந்தாங்க | - මෙන්න |
| வாங்க | - එන්න | | |
| தயவு செய்து | - කරුණාකර | நன்றி | - ස්තුති |
| வேண்டுமா? | - ඕනැද? | என்ன வேணும்? | - මොකක්ද ඕනෑ? |
| என்ன விலை? | - මිල කීයද? | எவ்வளவு? | - කීයද? |

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்தி, உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : அ. படக்கதை: புத்தியுள்ள காகம்

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- படங்களைப் பார்த்து, சம்பவத்தைக் கூறுவார்.
- படத்துக்குப் பொருத்தமான சிறிய வாக்கியங்களை அமைத்துக் கூறுவார்.
- தொடர் படங்களை அவதானித்து, கதையைத் தமது மொழிநடையில் கூறுவார்.
- வேறு படங்களை அவதானித்து, கதையைக் கூறுவார்.
- தாம் செவிமடுத்த கதையை, மீளக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- தரப்பட்டுள்ள கதையை உங்களது மொழிநடையில் கூறுங்கள்.
- வினாக்களை வினாவி, கதையைக் கட்டியெழுப்ப உதவுங்கள்.
- ஆளுக்கொரு சொற்றொடராகக் கூறி, கதையை முழுமையாக்க வழிப்படுத்துங்கள்.
- அவ்வாறே, தொடர் படங்களைக் காட்டி, அவற்றை ஒழுங்குமுறையாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| காகம் | தண்ணீர் | குடம் | கல் |
| தாகம் | தேடி | அலைந்தது | வந்தது |
| கண்டது | யோசித்தது | போட்டது | குடித்தது |
| இருந்தது | மகிழ்ச்சி அடைந்தது | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- தொடர்கதையைக் காட்டும் படங்கள், சொல்லட்டைகள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- படங்களைப் பார்த்துக் கிரகித்த விடயங்களைக் கூறுவார்.
- படத்தைப் பார்த்து முறையான வாக்கிய அமைப்பைக் கட்டியெழுப்புவார்.
- ஆசிரியர் கூறும் கதையைச் செவிமடுத்து, வினாக்களுக்கு விடை கூறுவார்.
- தொடர் படங்களை அவதானித்து, அவற்றின் அடிப்படையில் முழுமையான கதையைக் கூறுவார்.

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

| | |
|---|---|
| கல் - கற்கள்<br>பல் - பற்கள் | குடம் - குடங்கள்<br>மடம் - மடங்கள் |

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| காகம் | - | කපුටා |
| தண்ணீர் | - | වතුර |
| குடம் | - | කළය |
| கல் | - | ගල |
| தாகம் | - | තිබහ / පිපාසය |
| தேடி | - | සොයා |
| கண்டது | - | දැක්කා |
| யோசித்தது | - | කල්පනා කළා |
| போட்டது | - | දැම්මා |
| வந்தது | - | ආවා |
| குடித்தது | - | බිව්වා |
| அடைந்தது | - | ළඟාවුණා |
| இருந்தது | - | තිබුණා |
| மகிழ்ச்சி அடைந்தது | - | සතුටු වුණා |

பின்னிணைப்பு - 1

## புத்தியுள்ள காகம்



காகத்திற்குத் தாகம். தண்ணீர் தேடி அலைந்தது.



அது தண்ணீர்க் குடத்தைக் கண்டது. மகிழ்ச்சி அடைந்தது.



காகத்திற்கு எட்டவில்லை. காகம் யோசித்தது.
குடத்தினுள் தண்ணீர் மிகக் குறைவாக இருந்தது.



அருகில் சிறிய கற்கள் கிடந்தன.
ஒவ்வொரு கல்லாகக் குடத்திற்குள் போட்டது.
தண்ணீர் மேலே வந்தது.
காகம் தாகம் தீரத் தண்ணீர் குடித்தது.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.6** : சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்தி, உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : ஆ. படங்களைப் பார்த்து அபிநயத்துடன் பேசுதல்.

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- காட்சிப்படுத்தப்படும் படங்களில் காணப்படும் செயற்பாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- அந்தப் படங்கள் தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களைச் செவிமடுத்து, விடை கூறுவார்.
- தரப்பட்ட படங்களில் ஒன்றைத் தெரிந்து, அது தொடர்பான மூன்று வாக்கியங்களைக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- பொருத்தமான படங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி, மாணவரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- படமொன்றுக்கான விளக்கத்தைக் கூற, சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- படங்களைப் பார்த்து, அபிநயத்துடன் பேசுவதற்கு இடமளியுங்கள்.
- எல்லா மாணவர்களும் பங்கேற்றுச் செயற்பட இடமளியுங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | |
|---|---|---|
| படம் | உணவு | தேநீர் |
| கடவுள் | பெற்றோர் | பாடம் |
| ஓடுகிறார் | குளிக்கிறார் | குடிக்கிறார் |
| உண்கிறார் | வணங்குகிறார் | படிக்கிறார் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- சொல்லட்டைகள்
- செயற்பாடுகளை வெளிப்படுத்தும் படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- படங்களைப் பார்த்து அபிநயத்துடன் பேசுவார்.
- காட்சிப்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்பாக சிறிய வசனங்களைக் கூறுவார்.
- படங்களைப் பார்த்து, அபிநயத்துடன் பேசுவார்.
- வேறு படங்களைப் பார்த்து, அபிநயத்துடன் பேசுவார்.
- படங்கள் தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை கூறுவார்.

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

அம்மா கடவுளை வணங்குகிறார்.
அண்ணா பெற்றோரை வணங்குகிறார்.
அண்ணா ஓடுகிறார்.
அப்பா குளிக்கிறார்.
அக்கா தேநீர் குடிக்கிறார்.
அம்மா உணவு சமைக்கிறார்.
தம்பி உணவு உண்கிறான்.
தம்பி பாடம் படிக்கிறான்.
தங்கை நித்திரை செய்கிறாள்.

**உதாரணம்:**

**அப்பா குளிக்கிறார்**



**அக்கா தேநீர் குடிக்கிறார்**



**அம்மா உணவு சமைக்கிறார்**



**தம்பி உணவு உண்கிறான்.**



**தங்கை நித்திரை செய்கிறாள்.**



| | | | | |
|---|---|---|---|---|
| ஓடு | - | ஓடுகிறார் | ஓடுகிறான் | ஓடுகிறாள் |
| குளி | - | குளிக்கிறார் | குளிக்கிறான் | குளிக்கிறாள் |
| குடி | - | குடிக்கிறார் | குடிக்கிறான் | குடிக்கிறாள் |
| உண் | - | உண்கிறார் | உண்கிறான் | உண்கிறாள் |
| வணங்கு | - | வணங்குகிறார் | வணங்குகிறான் | வணங்குகிறாள் |
| படி | - | படிக்கிறார் | படிக்கிறான் | படிக்கிறாள் |

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| கடவுள் | - | දෙවියා |
| பெற்றோர் | - | දෙමව්පියෝ |
| உணவு | - | කෑම / ආහාර |
| தேநீர் | - | තේ |
| படம் | | පින්තූරය / චිත්‍රය |
| பாடம் | - | පාඩම |
| ஓடுகிறார் | - | දුවනවා |
| குளிக்கிறார் | - | නානවා |
| குடிக்கிறார் | - | බොනවා |
| உண்கிறார் | - | කනවා |

**தேர்ச்சி 3.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : கடிதங்களையும் வேறு படிவங்களையும் விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : உறவுமுறைக் கடிதம்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- கடிதங்களை உரத்து வாசிப்பார்.
- கடிதங்களை வாசித்து, அவற்றிலுள்ள தகவல்களைக் கூறுவார்.
- புதிய சொற்களை விருப்பத்துடன் வாசிப்பார்.
- முறையான உறவுமுறைக் கடிதம் ஒன்றை விளங்கி வாசிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :

- காட்சிப்படுத்தப்பட்ட சொல் அட்டைகளை உரத்து வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்கள் சொல் அட்டைகளை மீண்டும் மீண்டும் உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பாடநூலில் உள்ள கடிதத்தை வாசிக்க வழிகாட்டுங்கள்.
- புதிய சொற்களை இனங்கண்டு, அவற்றை வாசிக்க இடமளியுங்கள்.
- மாணவர் இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| அத்தை | மாமா | பேரன் | பாட்டி | |
| கடிதம் | முகவரி | திகதி | ஒப்பம் | பரீட்சை |
| விடுமுறை | நாங்கள் | எங்களுக்கு | நீ | உனக்கு |
| உங்கள் | உங்களுக்கு | நலம் | நலமா? | |
| சுகம் | சுகமா? | | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல்லட்டைகள்
- பின்னிணைப்பு - 1 மாதிரிக் கடிதம்
- பாட நூல்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- கடித உறுப்புகளை இனங்கண்டு வாசிப்பார்.
- கடிதத்தை உரத்து வாசிப்பார்.
- கடிதத்தை மௌனமாக வாசித்து, வினாக்களுக்கு விடை கூறுவார்.
- புதிய சொற்களை விருப்பத்துடன் வாசிப்பார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

**கடித உறுப்புகள்:**

முகவரி
திகதி

விளிப்பு

விடயம்

முடிவு

கையொப்பம்

| | | |
|---|---|---|
| நலம் | - | நலமா? |
| சுகம் | - | சுகமா? |

## சொற்களஞ்சியம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடிதம் | - | ලියුම / ලිපිය | முகவரி | - | ලිපිනය |
| பரீட்சை | - | විභාගය | விடுமுறை | - | නිවාඩුව |
| ஒப்பம் / கையொப்பம் | | අත්සන | திகதி | - | දිනය |
| தம்பி | - | මල්ලි | தங்கை | - | නංගී |
| மகன் | - | පුතා | பாட்டி | - | ආච්චි |
| மாமி | - | නැන්දා | மாமா | - | මාමා |
| நாங்கள் | - | අපි | எங்களுக்கு | - | අපට |
| உனக்கு | - | නුඹට | | | |
| நலம் | - | හොඳයි | நலமா? | - | හොඳයිද ? |
| சுகம் | - | සනීපයි | சுகமா? | - | සනීපයිද ? |

**பின்னிணைப்பு - 01**

இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
24. 09. 2014

அன்புள்ள அப்பா,

நான் நல்ல சுகம். நீங்கள் நல்ல சுகமா? இங்கு நண்பர்கள் எல்லோரும் நலமாக இருக்கிறார்கள். அங்கு அம்மா, தம்பி, தங்கை, மாமா, மாமி எல்லோரும் நலமா?

எனக்குப் பரீட்சை முடிந்துவிட்டது. நான் பாடசாலை விடுமுறை விட்டதும் உங்களைப் பார்க்க வருவேன்.

நன்றி

இப்படிக்கு

உங்கள்
அன்பு மகன்
**கி. சம்பத்**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 3.0** | : | நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார். |
| **தேர்ச்சி மட்டம் 3.2** | : | இலக்கியங்களை விளங்கி வாசிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | அ. சிறுவர் பாடல்: ''குருவிக் குஞ்சே.....'' |
| **பாடவேளை:** | : | 03 |

**கற்றற் பேறுகள் :**

- சிறுவர் பாடலை இரசனையுடன் வாசிப்பார்.
- பாடலைப் பொருள் அறிந்து வாசிப்பார்.
- பாடலில் வரும் புதிய சொற்களை ஆர்வத்துடன் வாசிப்பார்.
- பாடலைக் குழுவாகவும் தனியாகவும் இசையுடன் பாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- தரப்பட்ட சிறுவர் பாடலைக் காட்சிப்படுத்தி, உரத்து வாசித்துக் காட்டுங்கள்.
- ஒரு குழு பாடலை வாசிக்க, ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பாடலை இசையுடன் பாடுங்கள். மாணவர்களைச் சேர்ந்து பாட வழிப்படுத்துங்கள்.
- பாடலை மீண்டும் மீண்டும் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலைத் தனியாகவும் சோடியாகவும் குழுவாகவும் பாடுவதற்கு வசதியளியுங்கள்.
- மாணவர்கள் இடருறும்போது உதவி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| குருவி | அணில் | ஆடு | பாப்பா |
| குருவிக் குஞ்சு | அணில் பிள்ளை | ஆட்டுக் குட்டி | செல்லப் பாப்பா |
| தானியம் | வண்ண மாம்பழம் | ஆலிலை கோரைப் புல் | பள்ளிக்கூடம் |
| கொத்திக் கொத்தி | தின்ன | | படிக்க |
| போகிறாய்? | போகிறேன் | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - பாடல்
- ஒலிநாடா, இறுவட்டு
- பொருத்தமான படங்கள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலை விளங்கி, வாசிப்பார்.
- பாடல்களில் வரும் புதிய சொற்களை இனங்கண்டு வாசிப்பார்.
- தனியாகவும் குழுவாகவும் பாடலைப் பாடுவார்.
- சிறுவர் பாடல்களை தாளத்துடன், இரசித்துப் பாடுவார்.
- வேறு சிறுவர் பாடல்களை தாளத்துடன், இரசித்துப் பாடுவார்.

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**மாணவரைச் சோடியாக உரையாடச் செய்யுங்கள்.**

**அக்கா** : குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே எங்கே போகிறாய்?
**குருவிக்குஞ்சு** : கொத்திக் கொத்தித் தானியத்தைத் தின்னப் போகிறேன்.

**அக்கா** : சின்ன அணில் பிள்ளை நீயும் எங்கே போகிறாய்?
**அணில் பிள்ளை**: வண்ண மாம்பழத்தை நானும் தின்னப் போகிறேன்.

**அக்கா** : ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி எங்கே போகிறாய்?
**ஆட்டுக்குட்டி** : ஆலிலையும் கோரைப்புல்லும் தின்னப் போகிறேன்.

**அக்கா** : செல்லப் பாப்பா செல்லப் பாப்பா எங்கே போகிறாய்?
**பாப்பா** : பள்ளிக்கூடம் சென்று நானும் படிக்கப் போகிறேன்.

**வினாக்களுக்கு ஏற்ற விடை கூற உதவுங்கள்.**

1. **குருவிக் குஞ்சு எங்கே போகிறது?** தானியத்தைத் தின்னப் போகிறது.
2. **அணில் பிள்ளை எங்கே போகிறது?** வண்ண மாம்பழத்தைத் தின்னப் போகிறது.
3. **ஆட்டுக் குட்டி எங்கே போகிறது?** ஆலிலையும் கோரைப்புல்லும் தின்னப் போகிறது.
4. **செல்லப் பாப்பா எங்கே போகிறது?** பள்ளிக்கூடம் சென்று படிக்கப் போகிறது.

| | | |
|---|---|---|
| குருவி | - | குருவிக் குஞ்சு |
| அணில் | - | அணில் பிள்ளை |
| ஆடு | - | ஆட்டுக் குட்டி |

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| குருவி | - | කුරුල්ලා |
| குருவிக் குஞ்சு | - | කුරුලු පැටියා |
| அணில் | - | ලේනා |
| அணில் பிள்ளை | - | ලේන් පැටියා |
| ஆடு | - | එළුවා |
| ஆட்டுக் குட்டி | - | එළුපැටියා |
| செல்லப் பாப்பா | - | සුරතල් බබා |
| எங்கே போகிறாய்? | - | කොහේද යන්නෙ ? |
| தானியம் | - | ධාන්‍ය |

| | | |
|---|---|---|
| ஆலிலை | - | නුගකොළ |
| கோரைப் புல் | - | කලාදුරු |
| பள்ளிக்கூடம் | - | පාසල |
| (பாடசாலை / பள்ளி) | | |
| தின்ன | - | කන්න |
| (உண்ண / சாப்பிட) | | |
| படிக்க | - | ඉගෙනගන්න |
| போகிறேன் | - | යමි |
| கொத்தி | - | කොටලා |
| கொத்திக் கொத்தி | - | කොට කොටා |

**பின்னிணைப்பு - 1**

**குருவிக் குஞ்சே எங்கே போகிறாய்?**

குருவிக் குஞ்சே குருவிக் குஞ்சே
எங்கே போகிறாய்?
கொத்திக் கொத்தித் தானியத்தைத்
தின்னப் போகிறேன்.

சின்ன அணில் பிள்ளை நீயும்
எங்கே போகிறாய்?
வண்ண மாம்பழத்தை நானும்
தின்னப் போகிறேன்.

ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி
எங்கே போகிறாய்?
ஆலிலையும் கோரைப் புல்லும்
தின்னப் போகிறேன்.

செல்லப் பாப்பா செல்லப் பாப்பா
எங்கே போகிறாய்?
பள்ளிக்கூடம் சென்று நானும்
படிக்கப் போகிறேன்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : இலக்கியங்களை விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : ஆ. சிறுவர் கதை: ''தெனாலி ராமன் கதை''

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- சிறுவர் கதையை ஆர்வத்துடன் வாசிப்பார்.
- கதையை விளங்கி வாசிப்பார்.
- கதையில் வரும் புதிய சொற்களை விருப்பத்துடன் வாசிப்பார்.
- வாசித்த கதையை, ரசித்துக் கூறுவார்.
- கதையில் வரும் நல்ல பண்புகளைப் பின்பற்றி நடப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்களுக்குப் பரீட்சயமான அந்தரே கதை பற்றி, கலந்துரையாடுங்கள்.
- தரப்பட்ட சிறுவர் கதையைக் காட்சிப்படுத்தி, உரத்து வாசித்துக் காட்டுங்கள்.
- கதையை மீண்டும் மீண்டும் கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு கதையை வாசிக்க, ஏனைய குழுக்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- மாணவர் தமது சுயமொழியில் கதையைக் கூற சந்தர்ப்பம் அளியுங்கள்.
- கதையைச் சோடியாகவும், தனியாகவும் தமிழில் கூறுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| அரசர் | புத்திசாலி | வித்தைக்காரன் | நன்றி |
| மன்னிப்பு | புத்திக் கூர்மை | வித்தை | பரிசு |
| அரச சபை | மணல் | அயல் நாடு | கண்கள் |
| சிந்திக்க | சிரிக்க | தோல்வி | மானம் |
| வணங்குதல் | பாராட்டுதல் | கை தட்டுதல் | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - கதை
- பொருத்தமான படங்கள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- கதையைப் பொருள் விளங்கி வாசிப்பார்.
- கதையில் வரும் புதிய சொற்களை இனங்கண்டு வாசிப்பார்.
- தனியாகக் கதையைக் கூறுவார்.
- சிறுவர் கதைகளை வாசித்து இரசிப்பார்.
- கதையை நாடகமாக நடித்துக் காட்டுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

### கதையில் வரும் நல்ல பண்புகள்

கை தட்டுதல்
பாராட்டுதல்
பரிசு கொடுத்தல்
சிந்தித்தல்
தோல்வியை ஏற்றுக் கொள்ளல்
மன்னிப்புக் கேட்டல்
மன்னித்தல்
வணங்குதல்
மதிப்பளித்தல்
நன்றி கூறுதல்

| | | |
|---|---|---|
| வெற்றி | - | தோல்வி |
| புத்திசாலி | - | முட்டாள் |
| சிரிப்பு | - | அழுகை |
| விருப்பு | - | வெறுப்பு |
| மகிழ்ச்சி | - | துக்கம் |

### சொற்களஞ்சியம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசர் | - | රජතුමා | புத்திசாலி | - | නුවණක්කාරයා |
| வித்தைக்காரன் | - | විජ්ජාකාරයා | கண்கள் | - | ඇස් |
| வித்தை | - | විජ්ජා | நன்றி | - | ස්තුති |
| புத்திக் கூர்மை | - | නුවණ | பரிசு | - | තෑග්ග |
| மன்னிப்பு | - | සමාව | மணல் | - | වැලි |
| அயல் நாடு | - | අසළ රට | அரச சபை | - | රාජසභාව |
| மானம் | - | ගෞරවය | தோல்வி | - | පරාජය |
| சிரிக்க | - | සිනාසෙන්න | சிந்திக்க | - | සිතන්න |
| கை தட்டுதல் | - | අත්පොලසන් දීම | பாராட்டுதல் | - | ප්‍රශංසා කිරීම |
| மதிப்பளித்தல் | - | ගරු කිරීම | | | |

## தெனாலி ராமனின் புத்திக்கூர்மை

தெனாலி ராமன் நல்ல புத்திசாலி. அவன் எல்லோரையும் சிரிக்க வைப்பான்; சிந்திக்கவும் வைப்பான். அரசர், தெனாலி ராமனை அரச சபைக்கு வருமாறு கட்டளையிட்டார். தெனாலி ராமன் அரச சபைக்குச் சென்றான்.

அரச சபையில், வித்தைக்காரன் ஒருவன் வந்திருந்தான். அவன் அயல் நாட்டைச் சேர்ந்தவன். அவன், அரசர் முன் பல வித்தைகளைச் செய்து காட்டினான். எல்லோரும் அவனைக் கை தட்டிப் பாராட்டினார்கள். அதனால், வித்தைக்காரன் கர்வம் அடைந்தான். ''யாரும் என்னுடன் போட்டிக்கு வரலாம்'' என்று சத்தமாகக் கூறினான். ஆனால் ஒருவரும் முன்வரவில்லை. இறுதியில் தெனாலி ராமன் முன்வந்தான்; அரசரை வணங்கினான். ''இவன் ஒருவனாவது நாட்டின் மானத்தைக் காக்க முன் வந்தானே'' என்று அரசர் மகிழ்ந்தார்.

''நான் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு, வித்தை செய்வேன். நீ அதனை கண்களைத் திறந்து கொண்டு செய்ய வேண்டும்'' என்று தெனாலி ராமன் கூறினான். ''முதலில் நீ செய்து காட்டு. பிறகு நான் செய்கிறேன்'' என்று வித்தைக்காரன் கூறினான். தெனாலி ராமன் கண்களை மூடினான். மணலை எடுத்து, கண்களுக்கு மேலே போட்டான். அதனை எல்லோரும் கை தட்டிப் பாராட்டினார்கள். தெனாலி ராமன் எல்லோரையும் வணங்கினான்.

வித்தைக்காரன் தோல்வியை ஏற்றுக் கொண்டான். அரசனிடம் மன்னிப்புக் கேட்டான். அரசர் அவனை மன்னித்தார். '' அரசே, அவருக்குப் பரிசுகள் கொடுங்கள். இதுதான் எனது விருப்பம்'' என்று தெனாலி ராமன் கூறினான். அரசர் வித்தைக்காரருக்குப் பரிசுகள் கொடுத்தார். வித்தைக்காரன் மகிழ்ச்சி அடைந்தான். அரசரையும் தெனாலி ராமனையும் வணங்கி, நன்றி கூறினான். தெனாலி ராமனின் புத்திக்கூர்மையைப் பாராட்டி, அரசர் அவனுக்குப் பரிசுகள் கொடுத்தார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : வைத்தியசாலையில் காணப்படும் அறிவுறுத்தல்கள்

**பாடவேளை:** : 02

**கற்றற் பேறுகள்** :

- சிறிய அறிவுறுத்தல்களை மௌனமாக வாசிப்பார்.
- வைத்தியசாலையில் காணப்படும் அறிவுறுத்தல்களை அவதானமாக வாசிப்பார்.
- அவற்றைப் பொருள் விளங்கி வாசிப்பார்.
- பொது இடங்களில் காணப்படும் அறிவுறுத்தல்களை அவதானமாக விளங்கி வாசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வைத்தியசாலையில் காணக்கூடிய சில அறிவுறுத்தல்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
- அந்த அறிவுறுத்தல்களைப் பற்றி, மாணவர்களோடு கலந்துரையாடுங்கள்.
- அவற்றை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அவற்றின் பொருள் விளங்க, வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பொது இடங்களில் காணக்கூடிய அறிவுறுத்தல்களை அவதானித்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | |
|---|---|
| வரிசையாக நிற்கவும் | வெளி நோயாளிகளைப் பார்க்கும் நேரம் |
| மருந்து கொடுக்குமிடம் | வெளி நோயாளர் பிரிவு |
| அமைதியைப் பேணுங்கள் | பாதணிகளைக் கழற்றவும் |
| சத்தம் எழுப்பத் தடை | பாதையைத் தடை செய்யாதீர்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- அறிவுறுத்தல்கள் அடங்கிய சொல்லட்டைகள்
- மேற்றலை எறியி (OHP )

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- இலகுவான அறிவுறுத்தல்களை வாசிப்பார்.
- வைத்தியசாலையில் காணக்கூடிய அறிவுறுத்தல்களை மௌனமாக வாசிப்பார்.
- பொது இடங்களில் காணப்படும் அறிவுறுத்தல்களை வாசித்து விளக்குவார்.
- அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடப்பார்.

**பயிற்சிப் பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

| |
|---|
| அமைதியைப் பேணுங்கள். |
| பாதணிகளை அணியுங்கள். |
| கொதித்தாறிய நீரை அருந்துங்கள். |
| போசாக்கான உணவை உண்ணுங்கள். |
| கைகளைக் கழுவுங்கள். |
| குப்பைகளை உரிய இடத்தில் போடுங்கள். |

| | | |
|---|---|---|
| அமைதி | - | சாந்தம் |
| பாதணி | - | காலணி |
| நீர் | - | தண்ணீர் |
| உணவு | - | சாப்பாடு |
| கை | - | கரம் |
| இடம் | - | நிலையம் |

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| வரிசை | - | පේළිය |
| மருந்து | - | බෙහෙත් |
| இடம் | - | ස්ථානය |
| நோயாளி | - | රෝගියා |
| பாதணி | - | පාවහන් |
| பாதை | - | පාර |
| சத்தம் | - | ශබ්දය |
| தடை | - | තහනම් |
| நேரம் | - | වේලාව |
| கழற்றவும் | - | ගලවන්න |
| நிற்கவும் | - | ඉන්න |
| அமைதியைப் பேணுங்கள் | - | නිශ්ශබ්ද වන්න |

**தேர்ச்சி 3.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் காணக்கூடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : கட்புல சாதனங்களில் உள்ள தகவல்களைப் பார்த்து, விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : படங்களுடன் கூடிய கதை: "தாய் சொல்லைத் தட்டக்கூடாது"

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- படத்துக்குரிய வாக்கியத்தைக் கிரகித்து வாசிப்பார்.
- தொடர் படங்களை அவதானித்து, முழுமையான கதையை வாசிப்பார்.
- வேறு படக்கதைகளை விளங்கி வாசிப்பார்.
- வாசித்த கதையை தமது மொழிநடையில் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள படக்கதையைக் காட்சிப்படுத்தி, கிரகித்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- காட்சிப்படுத்தப்பட்ட படங்களுக்கான வாக்கியங்களை வாசிக்க உதவுங்கள்.
- ஆளுக்கொரு சொற்றொடராக வாசித்து, கதையை முழுமையாக்க வழிப்படுத்துங்கள்.
- அவ்வாறே, தொடர் படக் கதைகளைக் காட்டி, அவற்றை ஒழுங்குபடுத்தி வாசிப்பதற்கு உதவுங்கள்.
- மாணவர்கள், இடருறும்போது உதவி வழங்கி, அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | நான்கு | கோழி | கோழிக்குஞ்சு | அவை |
| தாய் | பருந்து | பாதுகாப்பு | பிடிக்க | துரத்தி |
| அடைகாத்தல் | குஞ்சு பொரித்தல் | ஓடி வந்தது | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- தொடர்கதை கூறும் படங்கள், சொல்லட்டைகள்
- பல்லூடகம்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- படக் கதைகளைப் பார்த்து, வாசிப்பார்.
- படக் கதைகளைப் பார்த்து கிரகித்து வாசிப்பார்.
- தொடர் படக்கதைகளை அவதானித்து, முழுமையான கதையை வாசிப்பார்.
- அறிமுகமற்ற சொற்களை விருப்புடன் வாசிப்பார்.
- கதையை விளங்கி வாசித்து, அதில் உள்ள படிப்பினையைக் கடைப்பிடிப்பார்.

**பயிற்சிப் பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**இவ்வாறான வினாக்களை வினாவி, மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.**

- இந்தக் கதையில் வரும் பிராணிகள் எவை?
- கோழிக் குஞ்சுகள் எத்தனை உள்ளன?
- குஞ்சுகளைப் பிடிக்க வந்த பறவை எது?
- இந்தக் கதையில் உள்ள படிப்பினை என்ன?

| | | |
|---|---|---|
| காத்தது | - | காத்தன |
| இருந்தது | - | இருந்தன |
| வளர்ந்தது | - | வளர்ந்தன |
| வந்தது | - | வந்தன |
| கண்டது | - | கண்டன |
| சென்றது | - | சென்றன |

## சொற்களஞ்சியம்

| | | |
|---|---|---|
| ஒன்று | - | එක |
| நான்கு | - | හතර |
| கோழி | - | කිකිළි |
| கோழிக்குஞ்சு | - | කුකුල් පැටියා |
| அவை | - | ඒවා |
| தாய் | - | මව |
| பருந்து | - | උකුස්සා |
| அடைகாத்தல் | - | බිත්තර රකිනවා |
| பாதுகாப்பு | - | ආරක්ෂාව |
| தாய் சொல்லைத் தட்டக் கூடாது | - | මවගේ වචනයට පිටුපාන්න එපා |
| ஓடி வந்தது | - | දුවගෙන ආවා |
| பிடிக்க | - | අල්ලන්න |
| துரத்தி | - | පන්නලා |

## தாய் சொல்லைத் தட்டக்கூடாது



கோழி ஒன்று அடை காத்தது.



நான்கு குஞ்சுகள் பொரித்தன.
அவை தாயின் பாதுகாப்பில் இருந்தன.
குஞ்சுகள் வளர்ந்தன.



குஞ்சுகளைத் ''தனியாகச் செல்ல வேண்டாம்'' என்று தாய் கூறியது.

ஒரு குஞ்சு மட்டும் தாயின் சொல்லைக் கேட்கவில்லை.

தாயை விட்டு தூரச் சென்றது. அந்தக் குஞ்சை, பருந்து கண்டது.



பருந்து குஞ்சைப் பிடிக்க வந்தது.
தாய்க்கோழி பருந்தை துரத்திச் சென்றது.
குஞ்சைக் காப்பாற்றியது.



அந்தச் குஞ்சு தாயிடம் ஓடி வந்தது.
"அம்மா, அம்மா உங்கள் சொல்லை இனி நான் தட்டமாட்டேன்" என்றது.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கிய விடயங்களைக் கிரகித்து, அவற்றைச் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : எழுத்துக்கள் பற்றிய விளக்கம்

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- ஒலி வடிவங்களுக்குப் பொருத்தமான வரி வடிவங்களை எழுதுவார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.
- எழுத்துக்களைப் பொருத்தமுறக் கையாண்டு சொற்கள், சொற்றொடர்களை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- தரம் 6 பாடநூலில், “படம் பார்த்துப் பேசுவோம் - 1 , 2” பாடங்களில் கற்ற விடயங்களை மீள வலிறுத்துங்கள்.
- ஆசிரியர் குறித்த ஒலி வடிவங்களைக் கூற, மாணவர் அதனைக் கிரகித்து, உச்சரித்துக் கூறுவதற்குப் பயிற்சி வழங்குங்கள்.
- மாணவர் உச்சரித்துக் கூறியவற்றை எழுதுவதற்குப் பயிற்சி வழங்குங்கள்.
- மாணவர் எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுகின்றனரா என்பதை அவதானித்து, வழிகாட்டுங்கள்.
- எழுத்துக்களைப் பொருத்தமுறக் கையாண்டு, சொற்கள், சொற்றொடர்களை அமைக்க வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

எழுத்து சொல் சொற்கள்

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- தரம் 6 இரண்டாம் மொழி தமிழ்ப் பாடநூல் - “படம் பார்த்துப் பேசுவோம் - 1 , 2” பாடங்கள் (பக்கம் 7 -12, 25 - 35)
- எழுத்துப் பொறிமுறை மாதிரிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- ஒலி வடிவங்களைக் கேட்டு, அதற்குரிய வரி வடிவங்களை எழுதுவார்.
- எழுத்துப் பொறிமுறைகளைப் பின்பற்றி எழுதுவார்.
- தமிழ், சிங்கள எழுத்துப் பொறிமுறை நுட்பங்களை ஒப்பிட்டுக் கூறுவார்
- எழுத்துக்களை இனங்கண்டு, அவற்றைப் பொருத்தமுறப் பயன்படுத்தி, சொற்களையும் சொற்றொடர்களையும் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கிய விடயங்களைக் கிரகித்து, அவற்றைச் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : விபரங்களை உள்ளடக்கிய பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : சுயசரிதை: ஒரு பேனாவின் சுயசரிதை

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- சுயசரிதை என்றால் என்ன என விளங்கிக் கூறுவார்.
- சுயசரிதை ஒன்றைக் கூறுவார்.
- சொற்களைக் கொண்டு இலகுவான தொடர்களை எழுதுவார்.
- முறையான சுயசரிதை ஒன்றை எழுதி முன்வைப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பின்னிணைப்பு -1 இல் உள்ள சுயசரிதையை வாசித்துக் காட்டுங்கள்.
- சுயசரிதை எழுதுவதற்குப் பயன்படும் சில சொற்களை அறிமுகப்படுத்துங்கள்.
- சொற்களைக் கொண்டு தொடர்களை அமைக்க வழிப்படுத்துங்கள்.
- முழுமையான சுயசரிதை ஒன்றை அமைத்து எழுத வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| அண்ணா | எனது | என்னை | |
| நிறம் | நீலம் | பேனா | படிவம் |
| கையொப்பம் | குப்பைக் கூடை | இந்தியா | இலங்கை |
| பழைய | கவனமாக | முக்கியமான | உடைந்துவிட்டது |
| வாங்கினார் | வைத்திருந்தார் | பயன்படுத்தினார் | எறிந்துவிட்டார் |
| வந்தேன் | அழுகிறேன் | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல் - ‘‘ஒரு பேனாவின் சுயசரிதை’’
- மாதிரி சுயசரிதைகள்
- பின்னிணைப்பு - 1

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:

- சுயசரிதை அமைப்பை விளங்கிக் கூறுவார்.
- சிறு சிறு தொடர்களை அமைத்து எழுதுவார்.
- சுயசரிதை ஒன்றை முழுமைப்படுத்தி, அதனை முன்வைப்பார்.
- இவ்வாறான வேறு சுயசரிதைகளை எழுதுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

**நான்** வந்தேன்.
**நான்** அழுகிறேன்.

**என்னை** வாங்கினார்.
**என்னை** வைத்திருந்தார்.
**என்னை** எறிந்துவிட்டார்.
**என்னைப்** பயன்படுத்தினார்.

| | |
|---|---|
| நான் | - என்னை |
| நீ | - உன்னை |

| **நிறங்கள்** | |
|---|---|
| நீலம் | வெள்ளை |
| கறுப்பு | மஞ்சள் |
| பச்சை | ஊதா |

### சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| பேனா | පෑන | வாங்கினார் | - ගත්තා |
| எனது | - මගේ | வந்தேன் | - ආවෙමි/පැමිණියෙමි |
| என்னை | - මාව | அழுகிறேன் | - අඬමි |
| நிறம் | - පාට | வைத்திருந்தார் | - තබාගත්තා |
| நீலம் | - නිල් | பயன்படுத்தினார் | - ප්‍රයෝජනයට ගත්තා |
| அண்ணா | - අයියා | எறிந்துவிட்டார் | - විසිකළා |
| | | உடைந்துவிட்டது | - කැඩුණා |
| படிவம் | - ලිපි ආකෘතිය | பழைய | - පරණ |
| கையொப்பம் | - අත්සන | கவனமாக | - පරිස්සමෙන් |
| குப்பை கூடை | - කුණු කූඩය | முக்கியமான | - විශේෂ / වැදගත් |
| இந்தியா | - ඉන්දියාව | | |
| இலங்கை | - ශ්‍රී ලංකාව | | |

**பின்னிணைப்பு - 01**

**ஒரு பேனாவின் சுயசரிதை**

நான் ஒரு பழைய பேனா.
எனது நிறம் நீலம்.
பாலன் அண்ணா என்னை இந்தியாவில் வாங்கினார்.
நான் அவருடன் இலங்கைக்கு வந்தேன்.
அவர் என்னைக் கவனமாக வைத்திருந்தார்.
முக்கியமான படிவங்களில் கையொப்பம் இடுவதற்கு என்னைப் பயன்படுத்தினார்.
ஒருநாள் எனது மேல் மூடி உடைந்துவிட்டது.
அதனால் என்னைக் குப்பைக் கூடையில் எறிந்து விட்டார்.
இன்று குப்பைக் கூடையில் இருந்து அழுகிறேன்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து, அவற்றைச் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : காலைக் கடமைகள்

**பாடவேளை:** : 02

**கற்றற் பேறுகள்** :

- காலைக் கடமைகள் தொடர்பான சொற்களை அறிந்து எழுதுவார்.
- தாம் நாளாந்தம் செய்யும் காலைக் கடமைகளை ஒழுங்குமுறையில் எழுதுவார்.
- ஆக்கபூர்வமான பந்திகளை அமைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- பின்னிணைப்பு -1 இல் உள்ள பாடலைப் பாடிக் காட்டுங்கள்.
- பாடலில் வரும் காலைக் கடமைகளை மாணவர் கூறுவதற்கு உதவுங்கள்.
- மாணவர் ஒவ்வொரு நாளும் செய்யும் காலைக் கடமைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- காலைக் கடமைகள் தொடர்பான சிறிய வாக்கியங்களை எழுத வழிகாட்டுங்கள்.
- குழுக்களாகச் சேர்ந்து, பந்திகளை அமைத்து எழுத வழிகாட்டுங்கள்.
- எழுதிய பந்திகளை வாசிக்க சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| கடவுள் | பாப்பா | தம்பி | தவளை |
| சேவல் | குயில் | பல் | முகம் |
| சீருடை | புத்தகம் | பாடசாலை | பாடம் |
| வீட்டுப் பாடம் | தமிழ்ப்பாடம் | காலைக் கடமைகள் | காலை உணவு |
| | | | |
| எழுகிறேன் | முடிக்கிறேன் | துலக்குகிறேன் | கழுவுகிறேன் |
| குளிக்கிறேன் | வணங்குகிறேன் | குடிக்கிறேன் | அணிகிறேன் |
| எடுக்கிறேன் | செல்கிறேன் | படிக்கிறேன் | |
| கூவி | பாடி | கத்தி | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- மாதிரிப் படங்கள்
- படத்துடன் கூடிய காலைக் கடமைகளை உள்ளடக்கிய சொல்லட்டைகள்
- பின்னிணைப்பு - 1

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- காலைக் கடமைகள் தொடர்பான சொற்களை அறிவார்.
- ஒவ்வொரு நாளும் செய்யும் காலைக் கடமைகள் தொடர்பாக சிறிய வாக்கியங்களை அமைப்பார்.
- காலைக் கடமைகள் தொடர்பாக சிறிய பந்திகள் ஆக்குவார்.
- தலைப்புக்குப் பொருத்தமானதும் ஆக்கபூர்வமானதுமான பந்திகளை எழுதுவார்.
- காலைக் கடமைகள் சிலவற்றை பாவனை மூலம் செய்து காட்டுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

- நான் காலையில் எழுகிறேன்.
- பல் துலக்குகிறேன்.
- முகம் கழுவுகிறேன்.
- கடவுளை வணங்குகிறேன்.
- பெற்றோரை வணங்குகிறேன்.
- தேநீர் குடிக்கிறேன்.
- காலை உணவு உண்கிறேன்.
- சீருடை அணிகிறேன்.
- புத்தகங்களை எடுக்கிறேன்.
- பாடசாலைக்குச் செல்கிறேன்.
- பாடம் படிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| எழுந்தேன் | - | எழுகிறேன் |
| கழுவினேன் | - | கழுவுகிறேன் |
| குடித்தேன் | - | குடிக்கிறேன் |

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| கடவுள் | - දෙවියා | தவளை | - ගෙම්බා |
| சேவல் | - කුකුළා | குயில் | - කොහා |
| பல் | - දත | முகம் | - මුහුණ |
| தேநீர் | - තේ | காலை உணவு | - උදේ කෑම / ආහාර |
| புத்தகம் | - පොත | பாடசாலை | - පාසල |
| வீட்டுப் பாடம் | - ගෙදර වැඩ | தமிழ்ப்பாடம் | - දෙමළ පාඩම |
| சீருடை | - නිල ඇඳුම | | |

| | | | |
|---|---|---|---|
| எழுந்தேன் | - අවදි වුණෙමි | படித்தேன் | - ඉගෙන ගත්තෙමි |
| துலக்கினேன் | - දත් මැද්දෙමි | கழுவினேன் | - සේදුවෙමි |
| வணங்கினேன் | - වැන්දෙමි | குடித்தேன் | - බිව්වෙමි |
| அணிந்தேன் | - ඇන්දෙමි | எடுத்தேன் | - ගත්තෙමි |
| சென்றேன் | - ගියෙමි | | |
| கூவி | - හඬ ලා | பாடி | - ගී ගයා |
| கத்தி | - කෑ ගසා | | |

**பின்னிணைப்பு - 01**

சேவல் கூவி எழுப்புது
சேதி சொல்லி எழுப்புது
பொழுது விடிந்து விட்டது
என்று கூவி எழுப்புது.

ஆடிப் பாடி எழுப்புது
குயில் பாடி எழுப்புது
பாப்பா வீட்டுப் பாடத்தைப்
படிக்கச் சொல்லி எழுப்புது.

தவளை கத்தி எழுப்புது
தம்பி உன்னை எழுப்புது
தமிழ்ப் பாடம் படிக்கச் சொல்லி எழுப்புது
தமிழ் உணர்வை ஊட்டுது.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து, அவற்றைச் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : கடிதங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : பாட்டிக்குக் கடிதம் எழுதுதல்

**பாடவேளை:** : 03

**கற்றற் பேறுகள்** :

- கடிதம் எழுதும் முறையினை அறிந்து எழுதுவார்.
- பொருத்தமான சொற்களைக் கையாண்டு, கடிதம் எழுதுவார்.
- சிறு வாக்கியங்களைக் கையாண்டு, கடிதம் எழுதுவார்.
- முறையான உறவுமுறைக் கடிதம் ஒன்றை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- பின்னிணைப்பில் உள்ள கடிதத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- கடிதம் எழுதும்போது பயன்படுத்தக்கூடிய சொற்களை அறிமுகப்படுத்தி, கலந்துரையாடுங்கள்.
- சிறிய வாக்கியங்களை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பந்தி எழுதுவதற்கு நெறிப்படுத்துங்கள்.
- முழுமையான கடிதம் ஒன்றை எழுதுவதற்குத் துணைபுரியுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| பேரன் | பாட்டி | மாமி | மாமா |
| நான் | நாங்கள் | எங்களுக்கு | |
| நீ | உனக்கு | உங்களுக்கு | |
| நலம் | நலமா? | சுகம் | சுகமா? |
| கடிதம் | பரீட்சை | விடுமுறை | |
| அன்புள்ள | | | |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிக் கடிதங்கள்
- பாடநூல்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- கடிதம் எழுதுவதற்குப் பொருத்தமான சொற்களை அறிந்து கூறுவார்.
- சிறிய வாக்கியங்களை எழுதுவார்.
- சிறிய பந்திகளை எழுதுவார்.
- சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, தங்களது தேவையை நிறைவேற்றும் வகையில் கடிதம் எழுதுவார்.

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

நான் நல்ல சுகம்.
நாங்கள் நல்ல சுகம்.

| | |
|---|---|
| அன்புப் பேரன். | அன்புப் பேத்தி. |
| அன்பு மகன். | அன்பு மகள். |

| | | |
|---|---|---|
| நான் - | எனது<br>எனக்கு | |
| நாங்கள் - | எங்கள்<br>எங்களுக்கு | |

| | | |
|---|---|---|
| நீ | - | உனது<br>உனக்கு |
| நீங்கள் | - | உங்கள்<br>உங்களுக்கு |

| | | |
|---|---|---|
| சுகம் | - | சுகமா? |
| நலம் | - | நலமா? |

## சொற்களஞ்சியம்

| | | | |
|---|---|---|---|
| பேரன் | - මුනුපුරා | பாட்டி | - ආච්චි |
| மாமி / அத்தை | - නැන්දා | மாமா | - මාමා |
| கடிதம் | - ලියුම | முகவரி | - ලිපිනය |
| பரீட்சை | - විභාගය | விடுமுறை | - නිවාඩු |
| நலம் | - හොඳයි | நலமா? | - හොඳයිද? |
| சுகம் | - සනීපයි | சுகமா? | - සනීපයිද? |
| சாப்பிடுங்கள் | - කෑම කන්න | அன்புள்ள | - ආදරණීය |

**பின்னிணைப்பு - 01**

புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
28.10.2014

அன்புள்ள பாட்டி,

நான் நல்ல சுகம். நீங்கள் நல்ல சுகமா? வீட்டில் எல்லோரும் சுகமாக இருக்கிறார்கள். அங்கு மாமி, மாமா, மாலா, நாதன் எல்லோரும் நலமா?

எனக்குப் பரீட்சை முடிந்துவிட்டது. நான் பாடசாலை விடுமுறை விட்டதும் உங்களைப் பார்க்க வருவேன். பாட்டி நேரத்திற்குச் சாப்பிடுங்கள்.

நன்றி

இப்படிக்கு

உங்கள்
அன்புப் பேரன்
**கி. சம்பத்**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 4.0** | : | நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய முக்கியமான விடயங்களைக் கிரகித்து, அவற்றைச் சொற்கள், சொற்றொடர்களில் எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம் 4.5** | : | தகவல்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | நத்தார் பண்டிகையில் பங்கு பற்றிய அனுபவம் |
| **பாடவேளை:** | : | 02 |

**கற்றற் பேறுகள்** :

- நத்தார் பண்டிகை தொடர்பான விடயங்களை அவதானித்துக் கூறுவார்.
- நத்தார் பண்டிகை தொடர்பான விசேட சொற்களை எழுதுவார்.
- அச்சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைப்பார்.
- நத்தார் பண்டிகையில் பங்கு பற்றிய அனுபவங்களை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- நத்தார் பண்டிகை தொடர்பான படங்கள், இறுவட்டுகளைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
- பண்டிகை தொடர்பாகப் பயன்படுத்தப்படும் விசேட சொற்களை எழுதி வழிப்படுத்துங்கள்.
- அந்தச் சொற்களின் பொருள் விளங்க, வாக்கியம் எழுத வழிப்படுத்துங்கள்.
- அவற்றை இணைத்து முறையான பந்தியாக எழுத வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| நத்தார் | பண்டிகை | மாதம் | பிறந்த நாள் | விடுமுறை |
| திகதி | அலங்காரம் | கேக் | சிற்றுண்டி | புதிய ஆடை |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- படங்கள்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள்:**

- நத்தார் பண்டிகை தொடர்பான கருத்துக்களைக் கூறுவார்.
- நத்தார் பண்டிகை தொடர்பான தொடர்களை எழுதுவார்.
- நத்தார் பண்டிகை பற்றி பந்தி அமைத்து எழுதுவார்.
- நத்தார் பண்டிகையில் பங்கு பற்றிய அனுபவங்களை விபரித்து எழுதுவார்.
- ஏனைய சமயங்களில் உள்ள பண்டிகை பற்றி அனுபவ ரீதியாக எழுதுவார்.

## பயிற்சிக்காகப் பயன்படுத்துங்கள்.

### நத்தார் பண்டிகை

- எனது நண்பனின் பெயர் டானியல்.
- டானியல் கிறிஸ்தவ சமயத்தவர்.
- கிறிஸ்தவர் இயேசுநாதர் பிறந்த நாள் நத்தார் பண்டிகை தினமாகும்.
- ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் இருபத்தைந்தாம் திகதி நத்தார் பண்டிகை கொண்டாடப்படும்.
- கடந்த வருடம் நத்தார் பண்டிகைக்கு முதல் நாள் டானியல் வீட்டிற்குச் சென்றேன்.
- இருவரும் வீட்டை அழகாக அலங்கரித்தோம்.
- டானியலின் அப்பா கிறிஸ்மஸ் மரத்தை நட்டார்.
- அதில் வண்ண மின்குமிழ்கள், வாழ்த்து அட்டைகளை நானும் டானியலும் இணைத்தோம்.
- டானியலின் அண்ணா சிறிய மாட்டுத் தொழுவத்தை அமைத்தார்.
- நாங்கள் அதனுள் பாலன் இயேசுவை வைத்தோம்.
- நானும் டானியலும் அவனது அண்ணா, அம்மா, அப்பா எல்லோரும் புதிய ஆடைகளை அணிந்தோம்.
- எல்லோரும் அன்று இரவு பன்னிரெண்டு மணிக்கு தேவாலயம் சென்றோம். பூசையில் பங்குபற்றினோம்.
- தேவாலயத்திலிருந்து வீடு திரும்பியதும் டானியலின் குடும்பத்தினருடன் சேர்ந்து, சிற்றுண்டிகள், இனிப்புகள் உண்டு, நத்தார் பண்டிகையைச் சந்தோசமாகக் கொண்டாடினோம்.

**சிறிய** மாட்டுத் தொழுவம்
**சுவையான** சிற்றுண்டி
**புதிய** ஆடை
**அழகான** வீடு
**வண்ண** மின்குமிழ்கள்

### சொற்களஞ்சியம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நத்தார் | - | නත්තල් | பண்டிகை | - | උත්සවය |
| கிறிஸ்தவம் | - | ක්‍රිස්තියානි | மாட்டுத் தொழுவம் | - | ගවගාල |
| மாதம் | - | මාසය | டிசெம்பர் | - | දෙසැම්බර් |
| பிறந்த நாள் | - | උපන්දිනය | விடுமுறை | - | නිවාඩු |
| இருபத்தைந்தாம் | - | විසිපස්වන | திகதி | - | දිනය |
| அலங்காரம் | - | සැරසිලි | கேக் | - | කේක් |
| சிற்றுண்டி | - | අතුරුපස | புதிய ஆடை | - | අලුත් ඇඳුම |

தயவுசெய்து இப்படிவத்தை (Photo copy எடுத்து)ப் பூர்த்திசெய்து, **பணிப்பாளர், தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம என்ற விலாசத்துக்கு** விரைவில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (தேவையாயின் மேலதிக தாள்களை இணைத்துக் கொள்ளுங்கள்)

**இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும்!**

இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பற்றிய தங்களின் மேலான கருத்துக்களை எங்களுக்கு அறியத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தங்களின் கருத்துக்கள் மூலம் இந்நூல் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியுமென்பதுடன், அடுத்து வரவுள்ள கல்விச் சீர்திருத்தப் பணிக்குத் தேவையான பின்னூட்டலாகவும் அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

01. **பாடத்திட்டம்** தொடர்பான கருத்துக்கள்:

அ. பாடத்திட்டத்தின் அளவு கற்பிப்பதற்குப் பொருத்தமானதா? ஆம் / இல்லை

இல்லை எனின், மேலும் விருத்தி செய்யவேண்டியவை எவை? விளக்கமாக எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

ஆ. பாடத்திட்டம் தொடர்பாக உங்களது மேலதிக கருத்துக்கள்

02. **ஆசிரியர் வழிகாட்டி** தொடர்பான கருத்துக்கள்:

அ. **ஆசிரியர் வழிகாட்டியின் அளவு** கற்பிப்பதற்குப் பொருத்தமானதா? ஆம் / இல்லை

இல்லை எனின், மேலும் விருத்தி செய்யவேண்டியவை எவை? விளக்கமாக எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

ஆ. ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள **தர விருத்தி உள்ளீடுகள்** கற்பிப்பதற்குப் போதுமானதா? ஆம் / இல்லை

இல்லை எனின், மேலும் விருத்தி செய்யவேண்டியவை எவை? விளக்கமாக எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

இ. ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள **பாடவேளைகள்** கற்பிப்பதற்குப் போதுமானதா? ஆம் / இல்லை

இல்லை எனின், மேலும் விருத்தி செய்யவேண்டியவை எவை? விளக்கமாக எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

ஈ. ஆசிரியர் வழிகாட்டி தொடர்பாக உங்களது மேலதிக கருத்துக்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

03. உங்களது பெயர்: ...............................................................................................................

04. விலாசம் : ...............................................................................................................

05. கற்பிக்கும் பாடசாலையின் பெயர்: ...............................................................................

06. பாடசாலையின் விலாசம்: ..................................................................................................

07. நீங்கள் இரண்டாம் மொழி தமிழ் கற்பிக்கும் வகுப்புகள்:. ...............................................

08. இரண்டாம் மொழி தமிழ் தொடர்பாக நீங்கள் கலந்து கொண்ட பயிற்சி நெறிகள் தொடர்பான விபரங்கள்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

09. இரண்டாம் மொழி தமிழைச் சிறப்பாகக் **கற்பிக்க** நீங்கள் முன்வைக்கும் கருத்துக்கள்:

..........................................................................................................................................

..........................................................................................................................................

ஆசிரியர் கையொப்பம்:.........................................................